1963 வைகாசி 5-5




அழகான பின்னணிக் காட்சிகளுடன்

நவீன முறையில்

## கவர்ச்சி மிக்க படங்கள் பிடிக்க

## சிறந்த இடம்

★

# குகன் ஸ்ருடியோ

பருத்தித்துறை.

தொலை பேசி எண்: 897.

## கார் சொந்தக்காரர்களே!

நீங்கள் உபயோகிக்கும் ப. நோ. சே. கலந்த ஒவ்வொரு கலன் **லங்கா பெற்றோல்.**

- உங்கள் கார் என்ஜினைச் செம்மையாக வைத்திருக்கிறது.
- உங்கள் கார்ப்பிரயாணத்தை உல்லாசமானதாக ஆக்குகின்றது.
- உங்கள் பணத்தை உங்கள் நாட்டிலேயே தங்கிநிற்கச்செய்கின்றது.

உங்கள் நன்மைக்கும்

உங்கள் நாட்டின் நன்மைக்கும்

# ப. நோ. சே. கலந்த

# லங்கா சூப்பர்

# லங்கா பெற்றோல்

ஆகியவற்றையே உபயோகியுங்கள்.

# இலங்கை
# பெற்றோலியம் கூட்டுத்தாபனம்

*113, காலிரோடு,* **கொழும்பு-3**



மங்காத ஒளியுடன்
சிங்கார எழிலுடன்

**மங்கையர்க் கேற்ற**

**தங்க நகைகளைக்**

குறித்த நேரத்தில் சிறப்பாகச்செய்து கொடுப்போம்.

## கலாவதி
## நகை மாளிகை

பெரியதெரு, : பருத்தித்துறை.




தயாரிப்பாளர்கள்:-

**R V G பீடிக் கம்பெனி,**

34, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

# இதோ ஒரு புதிய திட்டம்!

## இந்த ஆண்டின் மிகச்சிறந்த புகைப்படம் எது?

இதைத் தெரிவு செய்வதற்கு நாங்கள் ஒரு திட்டம் வகுத்துள்ளோம். எங்கள் ஸ்ருடியோவில் ஒவ்வொருமாதமும் எடுக்கப்படும் படங்களுள் சிறந்ததைத் தெரிவு செய்து ''கலைச்செல்வி''யில் பிரசுரிப்போம். 12 மாதங்களின் முடிவில், ஆண்டின் சிறந்த படம் தெரிவுசெய்யப்படும். வெற்றி பெறுபவருக்குப் பரிசு வழங்கப்படும். உங்கள் படமும் இத்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமா? இன்றே எங்கள் ஸ்ருடியோவிற்கு வந்து படம் பிடித்துக்கொள்ளுங்கள்.

**நீங்கள் அழகுள்ளவராக இருந்தாலுஞ்சரி, அழகில்லாதவராக் இருந்தாலுஞ்சரி, உங்கள் புகைப்படத்தைக் கவர்ச்சியான முறையில் எடுத்துக் கொடுப்போம்.**

# பிறின்ஸ்

## படப்பிடிப்பாளர்

(உரிமை : M. நடராசா)

K. K. S. வீதி, : சுன்னுகம்.






# கலைச்செல்வி

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

—பாரதியார்

கலை:5 | 1963 வைகாசி — ஆனி | காட்சி:5

MAY—JUNE 1963

1. மரபு
2. அன்பார்ந்த நேயர்களே!
3 இலக்கிய வானிலே
4. விழிதிறப்பு
5. கணகள்
6. தென்னிந்தியாவும்......
7. திருக்குறள் கீர்த்தனை
8. இரட்டையர்கள்
9. பலதும் பத்தும்
10. சிந்தனைக் கண்ணீர்
11. பட் பட்
12. நாடக விமர்சனம்
13. வறுமைக்கு வழிகாணும்......
14. நாகஸ்வரம பத்மநாதன்
15. திரை விருந்து

''கலைச்செல்வி''யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கட்டுரை, கவிதைகளில் தெரிவிக்கப்படும் கருத்துகட்கும் 'கலைச்செல்வி' ஆசிரியர் குழுவிற்கும் எவ்வித தொடர்புமில்லை.




தமிழங்கம்

'எல்லாந் தமிழ்' என்ற தலையங்கம் என்னைக் கவர்ந்தது. பல தடவை நான் படித்தேன். நண்பர்கட்கும் படிக்கக் கொடுத்தேன்.

கழுத்துறை. வை. இராமசாமி

தக்க தருணத்தில் தங்கள் தலையங்கம் வெளியானது பாராட்டிற்குரியது. உணர்ச்சிமிக்க தங்கள் வசனங்கள் பலரைச் செயல் புரியத் தூண்டும்.

அளவெட்டி சி. வைகுந்தன்

மண் இனித்தது!

'சு.வே.'யின் 'மண்வாசனை' அருமையான சிறுகதை. சமீபத்தில் நான்படித்த சிறுகதைகளுள் தலைசிறந்தது என்றும் சொல்லலாம். 'மரவள்ளிக் கிழங்கும் பழங்கறியுஞ் சேர்த்துத் தயிர்விட்டுக் குழைத்த கொழு கொழென்ற குழையல்...'— எவ்வளவு இனிமை! என்ன ருசி!

திருநெல்வேலி ஆ. நமசிவாயம்

புதுமுகம்!

'கலைச்செல்வி' கண்டுபிடிக்கும் புதிய எழுத்தாளர்கள் சோடை போகமாட்டார்கள்.' அன்பிற்கு முன்னுல்" கதையை எழுதிய நாக பூஷணி, அருமையான உதாரணம்.

மாத்தளை. கா. விஜயதேவி

சபாஷ் ஜானகி!

சௌகார் ஜானகி நடிகை மட்டும்தான் என எண்ணியிருந்தேன். அழகாகவும், அதே வேளையில் தெளிவாகவும் கட்டுரை எழுதுகின்றரே! சௌகார்! சபாஷ்!

புத்தளம், சிவாஜிப்பித்தன்

குறும்பாகினி

ராகினி அக்காவைப் பற்றிய கட்டுரையில் சுவையான செய்திகளைக் கண்டேன். குறும்புக்குப் பேர் போன அவரின் வாழ்க்கையில் இன்னும் எவ்வளவோ சுவையான நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்குமே! அவற்றையெல்லாம் ஏன் எழுதவில்லை.

கண்டி ஸ்ரீ இராமஜெயம்

தொடர்மொழிகள்:

சென்ற இதழில் வெளியான 'படமொழிகள்" உண்மையிலேயே சிறப்பான அம்சமாகும். அவற்றைப் படித்துப் படித்துப் பல தடவை சிரித்தேன். தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இப்படி ஏதாவது வெளியிடுவீர்களா?

சுண்டிக்குளி சி. பாலசுந்தர்

நிறுத்தாதே!

'திருடாதே" என்ற தலைப்பில் இன்னும் கட்டுரைகள் வருமா? பயப்படாமல் வெளியிடுங்கள். இத்தகைய கட்டுரைகளைப் படிப்பதற்காகத்தான், நான் இப்போது 'கலைச்செல்வி'யை வாங்குகின்றேன்

வண்ணார்பண்ணை வி. மனேன்மணி

ஜே! சன்!

"கலைச்செல்வி"யின் சினிமாக் கட்டுரைகள் புதுரகமானவை. மற்றப் பத்திரிகைகளில் வெளிவராத புதிய செய்திகள் பலவற்றை எழுதும் ஜெசனுக்கு ஜே!

திருமலை ம. கருணு

# மரபு

பழைய தமிழ் மரபிலிருந்து அணுவளவும் வழுவாது இலக்கியம் ஆக்கப்படவேண்டும், மொழித்தூய்மை பாதுகாக்கப்படவேண்டும். செந்தமிழில் எழுதப்படும் இலக்கியங்கள் மட்டுமே சிறந்த இலக்கியங்களாக முடியும்— இப்படிக்கூறுகிறார்கள் சிலர்.

மரபு என்று ஒன்று இல்லை. அப்படி இருந்தாலும் அது மனிதனாலேயே ஆக்கப்பட்டது. மரபைக் கட்டியழுவதனால் நல்ல இலக்கியம் தோன்றாது. இலக்கியகர்த்தா மரபை மீறலாம்—இப்படிக் கூறுகிறார்கள் வேறுசிலர்.

வரட்டுப் பண்டிதக் கூச்சலுக்கு எழுத்தாளன் செவிசாய்க்கக் கூடாது. பழைய மரபை உதறித் தள்ளிவிட்டுப் புதிய மரபை உண்டாக்கும் திறமையும் உரிமையும் எழுத்தாளனுக்குண்டு. புதுமை எழுத்தாளன் எப்படிஎழுதுகிறானே, அதுதான் அவன் மரபு — இப்படிக் கூறுகிறார்கள் இன்னுஞ் சிலர்.

தமிழில் ஒரு தனியான இலக்கிய மரபு உண்டு. அதை ஏற்படுத்தியவர்கள் மக்கள் தாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த மக்கள் சாதாரண மக்களல்ல; சான்றோர்கள். ஆழ்ந்த அறிவினாலும், தேர்ந்த அனுபவத்தினாலும்' கூர்ந்த மதியினாலும் அவர்கள் ஏற்படுத்தியதே மரபு. அதற்கு அமைந்து இலக்கியம் படைப்பதுதான் சிறப்பு. இந்த மரபையும் சில சமயம் மீறலாம். ஆனால் அந்த உரிமை யாருக்குண்டு? மரபு என ஒன்று இருப்பதை ஏற்றுக்கொண்டு, அது இதுதான் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, இலக்கியம் படைக்கும் இலக்கியகர்த்தாக்கள், வேறு வழி இல்லை என்பதைச் சரியாக உணர்ந்த சந்தர்ப்பங்களில் மட்டும் மரபை மீறலாம். தமிழைச் சரியாகப் படிக்காதவர்கள், தமது அறியாமையாலும் ஆற்றாமையாலும் மரபை உடைத்தெறிகின்றார்களே, அது தவறு. எல்லாந் தெரிந்த ஔவையாரை ஒன்றுமறியா இடைச் சிறுவன் என்றோ ஒருநாள் வென்றிருக்கலாம். அதற்காக, படிப்பறியாச் சிறுவர்கள்தாம் பார்புகழும் மேதைகள் என்று பறைசாற்ற முடியுமா? ஆழ்ந்த அறிவு எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கவேண்டும். பழமையிலிருந்து புதுமை முகிழ்க்க வேண்டும்.— இப்படிக் கூறுகிறார்கள் மற்றுஞ் சிலர். இவர்களைத்தான் ஆதரிக்கின்றோம் நாம்.


அடுத்த இதழில்:

## நான்தான் பால்ராஜ்!

''திருடாதே''– கட்டுரை மூலம் பிரச்சனைகள் பலவற்றைக் கிளப்பி, இலக்கிய உலகில் பரபரப்பை ஏற்படுத்திய பால்ராஜ் இதுவரை எழுப்பப்பட்ட கேள்விகட்கு விடையும் விளக்கமும் தருகின்றார்.

உங்கள் பிரதிக்கு உறுதி செய்துகொள்ளுங்கள்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். "கலைச்செல்வி" யின் வைகாசி இதழ் தாமதமாவது ஏன்? எப்படியாவது விரைவில் வெளியிட முயலுங்கள்; "கலைச்செல்வி"யைப் படிக்காவிட்டால் எங்கள் இலக்கியத் தாகம் தீரமாட்டேனென்கிறது, ஆகவே இனியும் தாமதப்படுத்தாதீர்கள்— இவ்வாறெல்லாம் ஏராளமான வாசகர்கள் எழுதியிருக்கிருர்கள். எக்காரணத்தைக் கொண்டும் பத்திரிகையை நிறுத்திவிடாதீர்கள் என்ற அன்புரிமைக் கட்டளையுடன் நீண்டதோர் கடிதம் எழுதியிருக்கின்ருர்கள் கொழும்பிலுள்ள இருபத்தைந்து வாசகர்கள். "கலைச்செல்வி"யின் எதிர்காலத்தைப்பற்றிப் பயப்படுபவர்கட்டு இப்போதே ஓர் உறுதியை அளிக்கின்ரோம். "கலைச்செல்வி" தொடர்ந்து வெளிவருவாள். இதுவரை செய்த இலக்கியப் பணியிலும் பார்க்க இன்னுமதிக பணி புரிவாள். பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களும் திடீரென்று விலையேறிவிட்டன. கடிதத்துக்குமேல் கடிதம் எழுதினுலும் சிலர் தமது சாந்தாப் பாக்கியை அனுப்பாதிருக்கின்றனர். இதனுல் ஏற்பட்ட பொருளாதார முடை நமது பத்திரிகையைப் பாதித்துவருகின்றது. இவற்றுடன், அச்சகத்து வேலை நெருக்கடியும் சேர்ந்தபடியால், வைகாசி இதழை உரிய காலத்தில் கொண்டுவர முடியவில்லை. இப்படியான ஒரு நிலைமை இனிமேலும் ஏற்படாது பார்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு. ஆதரவு மனப்பான்மையுடன் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிக் கடிதம் எழுதிய எல்லாருக்கும் எமது நன்றி உரியது.

திறமையுடைய புதிய எழுத்தாளர்களை ஊக்குவதில் 'கலைச்செல்வி" என்றுமே தயங்கியதில்லை என்பதைப் பலரறிவர். புதிய ஓர் எழுத்தாளரைக் கண்டு பிடித்தவுடன் நாம் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஆனுல் ஒரு சில புதிய எழுத்தாளர் செய்யும் தவறுகள் எம்மை மனவருத்தமடையச் செய்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றை இங்கே குறிப்பிடுகின்ரேம். "உயர்ந்தமாப்பிள்ளை" என்ற நகைச்சுவைக் கதை ஒன்றை மட்டக்களப்பிலிருந்து த. அருள் என்ற நேயர் எமக்கு அனுப்பியிருந்தார். கதை அவருடைய சொந்தக் கற்பனையில் எழுந்ததுதானு என்று நாம் எழுதிக் கேட்டோம். 'தன் சொந்தக் கற்பனை' என்பதை உறுதிப்படுத்திப் பதில் எழுதினுர் அந்த அன்பர். கதையைக் "கலைச்செல்வி" யில் வெளியிட்டோம். ஆனுல் அந்தக் கதை, பல ஆண்டுகளின்முன் "தினமணிக்கதிர்" இதழில் வெளியானது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்ஒருவர். இதன்காரணமாக, புதிய எழுத்தாளர்கள் ஏதாவது நல்ல கட்டுரை, கதைகளை எழுதியனுப்பினுல், அவற்றைச் சந்தேகக் கண்ணுடன்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. எழுத்தாளராகிப் புகழ் பெற விரும்புபவர்கள், தமது சொந்த முயற்சியால்தான் புகழை அடைய வேண்டும். திருடி எழுதிப் பெறும் புகழ் நீடித்து நிலைக்காது! குட்டு வெளிப்பட்டவுடன், தலை குனிய வேண்டி ஏற்படும்.

கடைசியாக எழுத்தாளர்க்கு ஒரு வார்த்தை: எங்களிடம் போதியளவு கவிதைகள் இருக்கின்றன. ஆகவே தொடர்ந்து கவிதைகளை அனுப்ப வேண்டாம். இனிமையான, புதுமைநிறைந்த, சிறந்த சிறுகதைகளை எழுதியனுப்புங்கள். 'புல்ஸ்காப்'தாளில் ஆறுபக்கங்கட்கு மேற்படாமல் எழுதியனுப்புங்கள்.

வணக்கம்.

—ஆசிரியர்.

## அடுத்த இதழில்:

### திருடாதே!

ஈழத்து எழுத்துலகில் காணப்படும் மேலும் சில திருட்டுப் படைப்புகளை அம்பலப்படுத்துகிறார் ,இலக்கிய அன்பர் ஒருவர். 'விபத்து' கதையின் ஆசிரியர் ஆனைமுகனின பதிலும் இடம் பெறுகின்றது.

### டைரக்டர் பாபு

தென்னிந்தியத் திரைவானில் தனித்துவத்துடன் திகழும் சந்திரபாபு, பல சுவையான செய்திகளைத் தன் கட்டுரையில் கூறுகின்றார்.

ஜெஸன் தயாரித்தளிக்கும் திரைவிருந்து, விஞ்ஞானக் கட்டுரை, அறிவுக்கதிர், விமர்சனப்போட்டி முதலியனவும் மற்றைய வழமையான அம்சங்களும் இடம்பெறுகின்றன.




உங்கள் கண்ணைப் பாதுகாக்க

★

இலவசமான கண்பரிசோதனை

★

அழகு மிக்க கண்ணாடி பிரேம்கள்

★

**அப்துல்லா அன் கோ**

127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 486




# பி ளா ஸா

தகரங்களில்
அடைக்கப்
பட்ட மீன்

அசல்
மக்ரல்
பைக்ஸ்

இப்பொழுது

**எங்கும்
கிடைக்கும்**

வை:- புறக்கோட்டை 32ம் இலக்கம் புச்சர் வீதியிலும்
எல்லா

## சி. டப்ளியூ. ஈ. கடைகளிலும்

டிப்போக்களிலும் கிடைக்கும்.

## . டப்ளியூ. ஈ. குரோசரி இலாகா

மக்கலம் ரோட், கொழும்பு-10

உ

சிவமயம்

# இந்து இளைஞன் வளர்ச்சி நிதி

அன்புடையீர்!

வணக்கம். நிதி நெருக்கடி காரணமாக கடந்த சில மாதங்களாக ''இந்து இளைஞன்'' வெளிவராதது சைவ உலகத்திற்கு பெரும் கவலையாக இருந்தது. சமய வளர்ச்சிக்கு நற்பணியாற்றி வரும் ''இளைஞன்'' தொடர்ந்து வெளிவர வேண்டுமென்ற பல அபிமானிகளின் இடையருத வேண்டுகோளினாலும், சங்கத்தின் விடாமுயற்சியினாலும், மீண்டும் புதுவருடத்திலிருந்து 'இந்து இளைஞன்' வெளிவருகின்றான். போதிய நிதி வசதியிருந்தால்தான், பல சிறந்த அம்சங்களுடன், புதுப்பொலிவுற்று 'இளைஞன்' வெளிவர முடியுமென்பதை யாவரும் அறிவீர்கள். எனவே இந்த உயரிய நோக்கத்தோடு, ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ''இந்து இளைஞன் வளர்ச்சி நிதிக்கு'' நன்கொடையாகவோ, சந்தாவாகவோ வாரி வழங்கி எமது அரிய முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தருமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**மு. சிவசிதம்பரம்,** (பா. உ.) தலைவர்.

**சி. கதிரவேலு** செயலாளர் கொழும்பு இந்து வாலிபர் சங்கம்.

**வருட சந்தா ரூ. 2-00**

(இங்கே கிழிக்கவும்)

---

# வளர்ச்சி நிதி அனுப்பவேண்டிய படிவம்

கௌரவ தனதிகாரி,
கொ. இ. வா. சங்கம்,
100, நோறிஸ் கனல் வீதி,
கொழும்பு-10.

ஐயா!

''இந்து இளைஞன்'' வளர்ச்சி நிதிக்கு ரூபா ................ நன்கொடையாக / சந்தாவாக அனுப்புகின்றேன். ''இந்து இளைஞன்'' தொடர்ந்து வெளிவர வேண்டுமென்பதே எனது வேணவா!

இங்ஙனம்,

பெயர்: ..............................

.......................................
(ஒப்பம்)

முகவரி: ..............................

திகதி: ..............................

# சோட்டுக் கவிஞர்கள்

## ஏ. இக்பால் - பஸீல் காரியப்பர்

அ. ஸ. அப்துஸ்ஸமது

சில மாதங்களுக்குமுன் தினகரன் ஞாயிறு இதழில் 'நோக்கு' என்ற தலைப்பில் இவர்கள் இருவரும் இரு கவிதைகளை எழுதி இருந்தனர். இதற்காக இவர்களைச் சோட்டுக் கவிஞர்கள் என்று குறிப்பிடவில்லை. இவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள் என்பதாலோ என்னவோ, இவர்களுடைய 'இலக்கியஊடாட்டத்திலும்' பலவகையான ஒற்றுமைகள் உண்டு. 'நோக்கு' என்ற கவிதையையே நாம் முதலில் நோக்கலாம். ஜனாப். இக்பாலின் நோக்கு இதோ!

வெறித்து நோக்கின் வெறுப்பேகூடும்
வெளியில் யாவும் சூன்யமே!
பறிக்க எதுவும் பண்பு காணேன்!
பாழும் உலகைப் பண்ணினோன்
குறித்த நிலைதான் எந்த நிலையோ!
குறியே தவறி ஆனதோ?
உறுத்தும் மனதின் வேட்கை இந்த
உலகிற் செல்வா எங்கேயோ!

உலகைக்காணும் போது ஒரு விரக்தி!வெறுமை! கானலின் உணர்வு ஏற்படுகிறது கவிஞருக்கு! இப்படியான ஓருலகைப் படைக்க வேண்டிய அவசியம் இறைவனுக்கு என்ன இருக்கிறது? சில வேளை குறிதவறி விட்டதோ! என்று ஐயுறுகிறார்! அடுத்து பஸீல் காரியப்பரின் 'நோக்கை'ப் பார்ப்போம்!

மலைதன் உச்சி உளபேர்க்கு
மலையடி மக்கள் சிற்றுருவாம்
மலையடி நின்று பார்ப்போர்க்கு
மலைவாழ் மக்கள் சின்னவராம்!
உலகிற் சிலபேர் ஞானிகளை
உதவான் எனவும் அவர்மாறி
நிலையில் தாழ்ந்த மட்டியெனும்
நிலையும் மலையின் நோக்காமோ?

'வெறுப்பும் மகிழ்வும்' அவரவர் நோக்கின் விளைவேயன்றி,வேறில்லை. ஒவ்வொருவரும் மற்றொருவரைப் புரிந்து கொள்ளும் முறை சரியாயின் எல்லாவற்றிலும் உள்ள உண்மையைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும், என்ற கருத்தை இக்கவிதை மூலம் காட்டுகிறார் பஸீல். இவர்கள் இருவரினதும் நோக்கு நமக்கு பொதுவான உண்மையொன்றை வெளிப்படுத்தி நிற்கிறது!

இக்பால்-பஸீல் ஆகிய இவ்விரு இளங்கவிஞர்களும், கவிதைத்துறையில் மிகச் சமீபத்தில் காலடி எடுத்து வைத்தவர்கள். 1960ம் ஆண்டில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் மாணவர்களிடையே நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தையும்,1962ல் அ.இ. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடாத்திய 'தங்கத்தாத்தா கவிதைப் போட்டி"யில் மூன்றும் இடத்தையும் பெற்று அறிமுகமானவர் பஸீல். தினகரன் 'புதன்மலர் சிறுகதைப் போட்டியொன்றில் முதலாம் பரிசு பெற்று (1959ல்) எழுத்துலகில் அறிமுகமான இக்பால்அதன்பின்னர்

## படி! படி!

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேருரை நிகழ்த்துவதற்காக ஒரு தடவை டாக்டர் சுவாமிநாத ஐயரவர்கள் சென்றிருந்தார். அப்போது அவருக்கு எண்பது வயதுக்கு மேலாகிவிட்டது. கல்லூரியின் வாயிலில் வந்து உள்ளே நுழையும்போது அவருடைய தள்ளாடும் நிலைமையையும் பார்வைக் குறைவையும் கருதிய அன்பர் ஒருவர் "ஐயா, படி, படி" என்று சொல்லிக் காலெடுத்துவைத்துப் படியேற வேண்டும் என்பதைக் குறிப்பித்தார். உடனே ஐயரவர்கள் "ஐயா படிக்கிறேன்! படித்துக் கொண்டே இருக்கிறேன். தாங்கள் சொல்லியபடியே செய்கிறேன்" என்று நயமுறக் கூறினார்:

அதிகமான கவிதைகளையும் எழுதியுள்ளார். தங்கத்தாத்தா கவிதைப் போட்டியில் இவருக்கும் 'பாராட்டிதழ்' கிடைத்தது.

பயிற்றப்பெற்ற ஆசிரியரான இவ்விருவரும் 'உருவகக் கதைகள்' எழுதுவதிலும் சிறப்பான இடத்தைப் பெற்று வருகிறார்கள். இக்பால் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். பஸீல் சம்மாந்துறையில் பிறந்தவர், இருவரும் ஒரே வயதினர்!

இக்பாலின் கவிதைகளில் பொதுவுடமைக் கருத்துக்கள் நிழலாடும். இவருடைய கவிதைகள் ஏதோவொரு பிரச்சனையைக் களற்றிக் கொண்டிருக்கும். பஸீலின் கவிதைகளில் தத்துவசிந்தனைகள் ஊசலாடும். இவருடைய கருத்துக்கள் எதையோ தேடும் பரபரப்புள்ளவை! சமமான சொல்லாட்சி உள்ளவர்கள் தான்: எனினும் இக்பாலின் சொல்லாட்சி சில இடங்களில் ஒட்டுப் போட்டது போலத் தெரிகிறது! இருவருடைய கவிதைகளிலும் மந்தமான உணர்வோட்டமிருந்தாலும், விறுவிறுப்பான நடையைக் கையாள்கிறார்கள். இக்பாலின் 'தண்மதியே' என்ற கவிதையில் ஒன்று இதோ!

வையத்தில் வாழ்வோரெல்லாம்
வழியினைத் தவற விட்டார்
ஐயத்தில் வாழும் நானும்
அகன்றிட இடமே இல்லை,
மையிருள் சூழும் நேரம்
மதியினை நினைப்பதுண்டு.
கையினிற்சிற கிருந்தால்
கடிதினில் உனையடைவேன்!

கவிதையில் அவருடைய பிரச்சனைத் தாகமும் வெறுமை விரக்தியும் காணப்படுகிறது! சாதாரண சொல்லாட்சியோடு, கருத்தை விளக்கி முடிக்கிறார். இந்த பிரச்சனை அல்லது வெறுமைத்தாகமே கவிதையின் உயிராக நிற்கிறது! இதோ பஸீலின் "நிலவிலே!"......

வெள்ளைக்கல் தனில் வடித்த
விசித்திர சிற்பம் தானோ?
கொள்ளை நல் எழில் பரப்பும்
கோதையின் உருவமாமோ!
நல்லிளம் மாதொருத்தி
நாயனைப் பிரிந்ததாலே
கல்லெனச் சமைந்த போது
கவின் நிலாக் கலந்த தாமோ!

சந்திரனைப்பற்றிஇவர் எண்ணும் எண்ணங்கள், கற்பனை வளமும் உவமையழகும் சிறந்து விளங்கு

கிறது! விறு விறுப்பான நடையில் கவிதையின் உணர்வோட்டத்தில் சிதைவேற்படா வண்ணம் முடித்திருக்கிறுர் பஸீல். தங்கத் தாத்தா கவிதைப்போட்டியில் பரிசு பெற்ற இவருடைய 'உயிர்' இவருடைய கவிதைகளுள் சிறப்பானதொன்று, என்று இவரே கூறமாட்டார். எனினும் அக்கவிதையில் அமைந்திருந்த பிரஞ்ஞை உணர்வு கலந்த தத்துவ சிந்தனையே, கவிதைக்கு உயிராக நின்று இவருக்குப் பரிசையும், அறிமுகத்தையும் தேடித்தந்தது. 'செருப்பு' என்ற இவரது கவிதையொன்று உண்மையில் நல்ல கவிதை யமைப்பும், உணர்வோட்டமும் உள்ளது.

ஜனுப் இக்பால் 'சுவை' என்ற கையெழுத்துப் பத்திரிகையொன்றை நடாத்தி வரும்போது, ஆரம்ப காலத்திலேயே நல்ல கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார். அதிபர் மஷுர் பாராட்டு மலரில் இவர் எழுதிய 'விதை' சிறந்ததொரு உருவகக் கவிதையாகும்! 'கலையமுத'த்தில் எழுதிய "வேண்டாத மனிதர்" என்ற கவிதையிலும் 'இவரது கவிதையில் இயல்பாகக் காணப்படும்" வெறுமை உணர்வு" சிறப்பாக அமைந்திருக்கிறது! இந்த வெறுமை உணர்வை அல்லது 'விரக்தி உணர்வை' புகுத்துவதன் மூலம், கவிதையில் உணர்வோட்டத்தை உண்டாக்கிவிடலாம் என்று எண்ணுகிறுர் இக்பால்! வளமான உணர்வோட்ட மிருந்தால்தான் வெறுமை' அல்லது விரக்திப் பாங்கையும், வெற்றிகரமாகச் சித்திரிக்க முடியும் என்று கூற விரும்புகிறேன்

உருவகக்கதைஇவ்விருவரினதும் உளப் பாங்கிற்கு ஏற்றதுறை! மேலும் முயன்ருல் இதிலும் சிறந்த இடத்தைப் பெறலாம் என்று கூறி வைக்க விரும்புகிறேன், ஆனுல் கவிதைக்கும் சரி உருவகக்கதைக்கும் சரி தெளிவும் லயமும் பொருந்திய சொல்லாட்சியே வெற்றியைத் தரும்.

இளங்கவிஞர்கள்! ஆரம்பமே நன்ருக அமைந்திருக்கிறது! இவர்களுடைய கவிதைத்துறையின் எதிர்காலம் பெருமிதப்படும் வகையில் அமையும் என்பது எனது நம்பிக்கை!


ஈழத்திலும் இந்தியாவிலும்
புகழ்பெற்ற
ஜெகஜோதி
பற்பொடியை உபயோகித்து
உங்கள் பற்களைப் பாதுகாப்பாக
வைத்திருங்கள்.
விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ
குருதேனிய



எல்லா டிராக்டர்களையும் விட

1.500.000

கமக்காரர்களினுல் மிகச்சிறந்ததென

நிரூபிக்கப்பட்டுவிட்டது!



மஸ்ஸி - பெர்குசன்

ஆர்ன்கோ அக்ரிகல்சரல் இன்டஸ்றீஸ்

பரந்தன் - வவுனியா

# விழித்திறப்பு

## சக்தியசீலன்

(காதலியர் கண்ணுறங்கிக் கனவுங்காணக்
கல்வியிலே ஈராண்டைக் கழித்தே வந்த
தீதறியார் படலையிடைத் திகைக்கக் கண்ட
திறப்புலவர் விழித்திறப்பைத் தொடக்கஞ்
செய்வார்)

மணமெனப்பெரிய பணமு டிப்புகளை
மகிழ்ந ருக்குதவு மனைவிகாள்!
கணமெ னப்பெரிய கலையிடைப்பிரியு
கணவரைத் தெருவில் எதிர்மினோ!

வடையி ருந்தகுழல் வழுகு மென்றுகணம்
வளைகு லுங்க, அவை சரிசெ வீர்!
தடையி றந்ததுயில் தனில்விழுந்தமையும்
தனிமையோ, அலது இனிமையோ?

படலை நாய்! அடட கொடிய நாயுமது
பழைய வீடுகளில் உறுமு நாய்!
உடலெ லாங்கடிகள் உதவ லாமதுமுன்
ஒழிமின் உங்கள்துயில்; விழிமினோ!

கடலை வண்டிநிரை படலை நின்றிரைய,
கதலி மென்தொடைகள் குதிசெய
விடலை வந்தரென, படலை சென்றழுது
விம்மி நின்றலறும் அம்மையீர்,

கற்று விட்டுமது கடையில் வந்தனரும்
கணவர் – தமதுடலின் நலமெலாம்
விற்று விட்டுணவு விழைய வந்தனர்; உம்!
விழிமின், ஏழுமணி விழுமினே!

தெருவிலேபெரியர் திரிகிருர்; நுமது
திசையில் போய்விழிகள் எறிகிருர்;
அரிய போதனைகள் அருளு வார்; அதுமுன்
அடி, எழுந்துவிழி துடைமினே!

'கடையி லோடியொரு கவளம்; பின்னரொரு
கதை; அதானபினேர் நடையு லா;
கிடையில்' என்றநிலை கிழிமின் அன்பர் கடு
கதியில் வந்தர்; எடி எழுமினே!

''செல்வ னுக்கறிவு சேர்க்கு நாளிதனில்
சீ, இதென்ன ப,டிப்'' பெனு
சொல்லி விக்கியொரு சோர்வெடுத்தமனஞ்
சுழலு, வீர்கள் விழி திறமினே!

தந்தி தீட்டிடுவிர், ''தந்தை வாட்டில்; பிழை
தாமதம்; விரைவில் வர''வெனு.
வந்து வீட்டிலவர் நொந்து பாட்டில்விழ
''வம்பி தெ''ன்றலறும் வாகையீர்!

தேர்வு தாளில் - ஒரு திருடு தாளில், மறு
திங்கள் ஈங்குவரல் தீட்டினர்;
ஆர்வ மோடவரும் அணைய வந்தனர்; உம்
அடி,எடுத் தெறிமின் போர்வைகள்!

'வசூ' வெழுந்தமெனின் பொழுதிழந்தமென
வரியி கொண்டிவர்கள் வருகிருர்.
பிசகெ ழுந்ததொரு துயில்வி ழுந்ததுமென்?
பிழை; பெரும்பிழை முன் எழுமடீ!

முந்தி யுங்கள்துயில் முறிமின் வந்தவரை
முறுவ லோடுவர வேர்மினே!
பிந்தி யுங்கள்கதை; போது மேதமுடன்
புதியதானவிழி மொழி செய்வீர்!

---

வரியி : ராக்ஸி

(நல்லார் உடலசைய நையாண்டி பாடுபவர்
கல்லூரி நாளிலவர் காதலுலா சாடுகிறார்)

கலைகாண முனைநாளில் படர்காளை தெருவில்
கருநாக சடைகாண நெரிவார்தம் மனதின்
நிலைகாண விழியாமென் நெடுவேலை விடுவீர்
நிதிகாணப் பிரிவார், நும் குதிகாண விழிமின்!

தடமென்ற விழிரண்டில் தவ றுண்டு விழுவார்
தமைவென்று அவர்நன்று தரநின்ற பொருளில்,
படமென்று, சடையென்று பரிசென்று அடையா
பதிசென்று, குதிகன்றப் பயில்வீர், கண்திறமின்!

'முறையாக' நுங்காதல் அவர்வீசு மடலை
முன்செல்வ மில்லாத சிலர்பெற்ற பொருள்போல்
உறைநீவி யாரேனும் இல்லாவிடத்தே
உற்றுற்று நெஞ்சந்தளிர்ப்பீர்கள் எழுமின்!

(பூவையர்தம் மேனிப் புனைவு நலன்)

பூசள வளவெனும் புதுநிறம்;
பொடியள வளவெனும் நறுமணம்;
காசள வளவெனும் கடைநடை;
கதையமு தனையவர் விழிமினே!

நுரைபுரை துகில்மலை சரியவும்
நுதலிடை இருகயல் புரளவும்
திரைதரு அருவியிற் திரிகுவீர்
திருவிழிக் கதவுகள் திறவுமின்!

புடைபடப் புனைகுழல் வளர்தொறும்
புதுமனப் பொடியளும் புகழ்சொலி
அடிபடத் தெருநடை அருளுவீர்
அணைவிடுத் தவர்களைத் தழுவுமின்!

பலநகை வகைகிடந் திலகவும்
பலவிழி யவையிடை யலையவும்
பொலவிலை நிலையமென் றசைகுவீர்
புதுமணி யிணைவிழி திறமினே

பொட்டுகள், கட்டுகள் பொலிதொறும்
　　பொறியியல் அறிஞர்தம் புலமையும்
மட்டமே என்னுமா றுயருவீர்
　　மயலுடைத் துயில்துறந் தெழுமடீ!

ஒப்பனை முடி, முகில் உதையவும்
　　ஒளிமணி, முத்தணி ததையவும்
சப்பறம் என்வரு சதிகளே!
　　சார்ந்தவும் பதிகளைத் தொழுமினே.

❁

விழலைத்தரு மொழியிற்பல
　　'வடுகு' ஞ் சில தமிழும்
குழறத்தரு கதை நாடியர்
　　குமுதத்தினை திறமின்!

பஞ்,சப்படி, பதி, சொற்படி,
　　படலைப் படி தாண்டி
நெஞ்சப்படி கடைவீதியில்
　　நிற்பீர் கயல் திறமின்.

(ஓதஅவர் போயகல ஒண்டொடியார் கண்டதுயர்)

போகுநர் வருகுநர் தேரொலி
　　புதுமணக் கணவர்தம் வரவென
தாகமோ டோடுவீர்; பிறர்வரத்
　　தரையினிற் கீறுவீர் விழிமினே.

கல்லொடு ஊரியை உணவென
　　கலைபயில் ஆண்டிரண்' டுண்டவர்
பல்லிரண் டின்றியே வந்தனர்
　　பதைபதைத் தெழுமடீ பாவையீர்.

❁

பள்ளிப் போர்க்கு அவர்பிரிய
　　பாயற் கடலை நீந்தாது
''கள்ளிச் சோரு வாழ்க்கை"யெனக்
　　கதறுங் கனிகாள் எழுமினடீ!

பல்லிக் குங்கள் செவியீந்து
　　படலைக் கிரண்டு கயலீந்து
பல்லுக் கழகு நகமீந்து
　　பதுமைக் குங்கள் வடிவீவீர்!

சுத்தமாக

சுகா

நவீன இயந்திரங்களி

விஜயுயர்ந்த மூலப்பொருட்

தயா[illegible]க்கும்

# பேபி

ப

சுப்

போன்: 9

போன்

373

# நிதி லிமிற்றெட்

## நிரந்தர சேமிப்பு மூலம்

அண்டில் ரூ. 1000-00 ஆகும்

ரூ. 2000-00 ,,

அறிவித்தலின்

எடுக்கலாம்

000-00 க்கு

70-00

4-00

-00

00

0

காலின் அதரில் தலையீந்து
'கடிதன்' வரவில் விழியீந்து
ஏலின் ஆங்குத் துயில் தோய்ந்து.
இனையும் கனிகாள் துயிலெழுமின்

உள்ளப் பிரிவார் நினைவொழிய
உலவச் சென்றும் அவர் தமையே
பள்ளிச் சிறுவர் கொண்டுவரும்
'பணி'சிற் கண்டு பதறிடுவீர்.

வேகம் விழைய வருகொழு நர்
விடுக்கும் தந்தி எனவந்தக்
காகங் கரையக் களித்திடுவீர்
கயல்கள் திறந்து எழுமினடீ.

கொஞ்சம் கொஞ்சம் என்றெழுதிக்
குதலைக் கதைகள் மலையாக
அஞ்சல் அதையே பொதியாக
அனுப்பிக் களிப்பீர் விழிதிறமின்!

அறையில் தம்பி அனுமார்கள்
அத்தான் கடிதம் கொண்டுவரச்
சிறையில் சூளா மணிபெற்ற
செல்விக் குவமை சொல்லிடுவீர்,

நினைந்து நினைந்து அவரெழுதும்
நேயக் கடித நினைவுகளில்
நனைந்து நனைந்து 'அது'காணும்
நல்லீர் வல்லே துயிலெழுமின்!

"நாயைக் கலைக்கப்படலையிடை
நானே போவேன்" எனவுங்கள்
தாயைத் தடுத்துப் போயங்குத்
தலைவர்த் தேடும் விழிமடவிர்!

'வருவார் வருவார்' எனப்பார்த்தும்
'வாரார் வாரார்' எனவேர்த்தும்
ஒருபாடாகா உளமுடையீர்
ஒழிமின் ஒழிமின் விழிமினடீ!

மாற்றம் என்னத் தூற்றுவதும்
மற்றைத் திங்கள் சம்பளத்தின்
ஏற்றம் என்னப் போற்றுவதும்
இயலாம் மடவீர் விழிதிறமின்!

கொள்ளுந் துயிலின், குறட்டையிலும்
கொழுநர் பயிலுங் கலைமேலே
அள்ளி அள்ளி வசைபொழிவீர்
அழகுக் கண்கள் திறமினடீ!

வெள்ளிக் கிழமை-நுங்கணவர்
விடுகைக் கிழமை, நடுநிசியே
துள்ளி எழுந்து விடியளவும்
தூங்காக் கண்ணீர் துயிலெழுமின்.

சம்பளங் கொண்டவர் வருவழிச்
சறுகுவார் நண்பரோ டெனவிழி
அம்புகொண் டெங்கணுந் தடவுவீர்,
அமளிவிட்டவர்தமை அணுகுவீர்!

வாளெ,ளுந்திரையும் போர்பு ரிந்தவரின்
வாகை பாடுதமிழ் வாயினீர்,
தாளெ ளுந்திரையும் போர்பு ரிந்தவரின்
தலைமை பாட விழிதிறமினோ!

(போர்வை அசையப், புதிதுண்ணப் பாடுகிறார்

உணவு உண்பதிலோர் உருசி உண்டெனவும்
உணர்கி லாதுகலை பயிலுவார்
மணவு லாவுபல அமுத பானமுண
மடையி, லோடியவை அடுமடீ!

உலையி லோடியுடன் அரிசி போடுமடி
உதவி கோரியொரு கடைசெலேல்
வலையி லோடு குழல் வழுகும்; காரியமில்
வந்த, வர்க்கமுது படைமினோ!

'இயலில்' எதனையும் அறிவிர்; அதனையும்
எழுதி அள்ளுவிர் புள்ளிகள்.
செயலில் அவைவரல் சிரமம்; சருகையும்
சிதைய புதியவை படைமினோ!

வளைகள் மோதி ஒலிக்கட்டும்
வடிவாய்க் கூட்டிப் பெருக்கட்டும்
களைகள் கணவர்க் கோடட்டும்
கனிவிற் பானை தூக்கட்டும்.

உலைகள் எங்கும் கொதிக்கட்டும்
ஓடிக் கறிகள் ஆறட்டும்
சிலையாய் அவர்கள் சமையட்டும்
செல்லக் கதைகள் பேசட்டும்.

வாழைக் குருத்தும் விரியட்டும்
வண்ணக் கைகள் படைக்கட்டும்
வேளைக் கன்பர் அருந்தட்டும்
விழுந்து விழுந்து தூங்கட்டும்.

நாளைக் கவரும் எழும்பட்டும்
நம்மைப் பார்த்துச் சிரிக்கட்டும்
வேளை பார்த்துப் புடைவைக்கு
விண்ணப்பங்கள் விரியட்டும்!

❁

சரச ரக்குமொரு சருக தற்குமொரு
சந்தி மட்டும்விழி சிந்துவீர்!
கரகரத்துவரு, குரலடைத்ததிரு
கயல்திறந்த வரை அணைமினே!



கி

ஊட்டுவது




786 கல்கி பீடி

# 786

# கல்கி பீடிகள்

## இன்றே பா வித்துப் பயனடையுங்கள்.

திறம் ... பிலே, பீடியிலே, மொத்தமாகவும்
சி... வும் பெற்றுக்கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

39, K. K. S. வீதி
யாழ்ப்பாணம்

44, 3ம் குறுக்குத் தெரு,
கொழும்பு

தொழிற்சாலை:

118-12, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

மனதை அவனால் எதுவுமே செய்ய முடியாது. அவனே தன்னுள் காரண மற்றுத் தோன்றி, தன் இயக்கங்களையே கொழுப்புப் பூசப்படாத வண்டிற் சில்லுகளைப்போல தடைபடுத்தும் எண்ணங்களை உணரமுடியாதவனாய் இருந்தான். ஆனால் கௌரி என்ற மங்கிய ஒளியின் நிழலில் – தான் – தன்னுடைய நினைவுப் பாடங்களைப் பக்கந்தட்டிப் புரட்டும் பொழுது, இப்பொழுதுமட்டும் அவளிருந்தால் தனக்கு ஒன்றுமே ஏற்பட்டிராதென்று யோசிப்பதுமுண்டு.

அவனுக்கு - தனக்குள் ஏற்படும் துன்பங்கள், தன் மனதுள் உண்மையோ, பொய்யோ என்பது தெரியாது. கௌரி என்ற நினைவின் இளவெய்யிலில் நனைந்து கொண்டே அவன் உலகினை வெறுத்தான் அவன் நேசித்த எல்லா நேசங்களுமே நேசமாயிருந்த கௌரியோடு அணைந்து போயினபோல, அவனுக்குள் துயில்கொள்ளும் எண்ணங்கள் இடைக்கிடை அனுங்கிக் கொண்டிருந்தன. அந்த மென்மனதால் பழக்கத்தின் பிரிவைத் தாங்கமுடியவில்லை. தாங்கமுடியாததனால்தான், நெல்லிலிருந்து பிரியமுடியாத உமியாகி அவனது நெஞ்சம் கௌரியோடேயே ஒட்டிக்கொண்டது.

"எத்தினை துன்பம்...எத்தினை வேதனை..."

நெற்றியில் முத்திட்ட வியர்வையை, அவன் சுண்டு விரலை, 'ப' வடிவம் கட்டி வழித்தெறிந்தான். அந்த வேளையிலேயே, மீண்டும் குமிழ்ப்பனவெல்லாம் கௌரியினுடைய நினைவுகள்தான்!

கௌரியினுடைய கண்கள்—

'எவ்வளவு அழகிய கண்கள். நீண்டு ரேகையிட்டிருக்கும் கரு ரோமப் புருவக்கீற்றுக்கள். அவற்றின் கீழே வெண்விழிப்பரப்பில் சுழரும் அந்தக் கருமணிகள்—'

∴ ∴ ∴

காத்த கண்களை அவன் இழந்துவிட்டான். புனர் ஜென்மம் பெற்ற பார்வை மீண்டும் இழக்கப்பட்டது. ஆஸ்பத்திரியின் காட்சியே அவனுக்குக் கடைசிக் காட்சி.

கட்டு அழுத்தும் வேதனையையும் அலட்சியப்படுத்திக் கொண்டு குலுங்கியழுதபடியே தலையணைக்குள்ளேயே அமைதியைத் தோண்டி எடுக்கும் உன்மத்தத்தில, அவன் நாடியால் தலையணையைக்குத்தி, முகத்தினால் குடைந்து தலையணையின் நடுவுள் கிடங்கு தோண்டுகின்றான்.

இருளின் துகிலையுரியும் ஒளியுமிழ்வில், வீதியின் ஓரமாகக் கட்டுண்டு கிடந்த கயிறொன்று அறுந்து அதன் சிறுதுண்டொன்று ஆஸ்பத்திரி யன்னலில் சுற்றுண்டு கிடப்பது மங்கலாகவே தெரிகின்றது. அந்தக் கயிற்று நுனியின் சிறுபுரி, குஞ்சங் குஞ்சமாக முறுக்கு இற்றுப் போய்த் தொங்கிக்கிடக்கின்றது.

கட்டிலில் கிடந்தவனுக்கு, கண்களுள் கால்பதித்துத் தோன்றித் தோன்றி வளைவனவெல்லாம்ஒன்றையொன்றுபிணையும் பாம்புகளாகவேயிருக்கின்றன. சாரையும் புடையனும், கோடாலிப்பாம்பும், கட்டுவிரியனும் வயற்கோவியனும்—அவற்றின் வழுவழுத்த உடல்கள் வேர்வை கசியும் தன்னுடைய உடலோடு இழைந்து நெளிவதுபோன்ற உணர்வினில் அவன் மனம் பயங்கரங்கலந்த அருவருப்பையடைகின்றது. கட்டில் மெத்

ணை
செய்ப
ண்க
களை
ருன்.



புலி
எல்
அல
சொற்
ளிவந்
தடு
ந்து

அவன்
கயின்
தயத்
ழயலு

'இருளுக்கு ஆயிரங் கண்களாம். அப்படியானல் அவற்றின் வெண் படலம் எங்கே? கருமணிகள் எங் கே?'

அவன் தன்னுடைய கண்களைத் தடவிக் கொள்ளுகின்ருன். அதில் அவனுக்கு கூறமுடியாத நிம்மதி, புனர்ஜன்மம் பெற்றுவிட்ட கண்கள், எந்த இதயத்தின் எண்ணங்களுக்கு வழிவாசல் அமைத்திருத்ததென்பது அவனுக்குத் தெரியாது.

கால்கள் விறைப் பெய்துகின் றன. அரசமரப் பழுப்பிலைகளைப்போல காலடிக்குள் ஏதோ குவிந்து வழு வழுப்பதைப்போல அவன் உணரு

கின்ருன். உணர்வின்
முதிர்வினில் அவன்
தடவுகின்ருன். தடவியவ
டத்துள் விழத் தள்
போல, குரலெழுப்புகின்

''ஐயோ...''

அவனது கூச்ச
விளக்குகள் உறக்
விழித்து சட்டென்று கண்

''என்ன...''

''என்ன...''

நொண்டும், சுற்றத்
களுக்கு, அவனின்
தான் விடை கொடுக்கி

''அங்கே...அது...அ

கால்களுக்கு
பாம்பு, சூழலின் தி
அங்கேயே தடுமாறி உ
கின்றது. தலை நசிந்து
நிலையில், பனங்கிழங்குப்
தாய் நாக்கு தொங்கி
மிதக்க சப்பளிந்து கிடக்
அவன் அருவருப்புணர்
நோக்குகின்ருன்.

''என்ன பாம்பெண்

''கவனமாய்ப் பாரு

தடியால், பாம்பு
நிமிர்த்தப்பட்டு, தடியால்
தில் கீழ்கொடுத்து அரை
யாய் தூக்கப்பட, வெளி
அதனை இனங்கண்டு
கரத்தகுரல் கிறீச்சிடுகின்

''என்ரை ஐயனே
பாம்பு...''

அவனது முகம் வி
றது. வாயைக் கோ
கைகள் விரல்களை மாறு
விப் பிசைந்து நெட்டி
கள் மேலாகச் செருகுகி

''என்ன... என்ன...

தரிகின்றன. அவன் தட்
கின்றான். கண்கட்டு
பாடடப்படுகின்றது.
து நினைவு, மின்னல்
வெட்டி அடிக்கின்றது.
ன்னலின் பொழுது சின்
யதிலேயே கணேஷ் கண்
துவிட்டான்.
ட்டற்ற பலகாரமானநெஞ்
தள் மாயநிரம்பல் செய்வ
துன்பமே. வைக்கோற்
து வைக்கோல் பறித்துப்
களைப்பவனைப்போல,
மன உளைவுப்பட்டடை
கணேஷ் பறித்துப்பறித்து
ம் நினைவுகள் எல்லாம்,
ப்பையே அவனது
ம் பரவிக்கின்றன.)
சோனாவாரியாகப் பெய்து
க்கின்றது. அடர்விரு
ட தணற்கோடுகளாய்
வாய்க்கால் வெட்டுகின்

ம், கௌரியும் வீட்டு
வள்ளம் விட்டு விளை
ளடிருக்கின்றார்கள். தாராக்
ு அவை நீருள் ஊர்ந்து,
பாட்டுகளின் குத்தலால்,
ாய்ந்துவிட, அவற்றை
ண்டும் நேராக்குகிறார்

ி உன்ரை வள்ளம் பிந்
ரை முந்துதுபார்'' அவன
இறங்கித் தோணியைச்
றான். கௌரி அவனைத்
ள். நீண்ட மருண்ட விழி
ஞ்சல் அவனை நனையச்
ன்றும் தடுக்கவில்லை.
டு...வந்திடடா... உனக்
வற்றி"

காற்றில் கிழியுண்டு தொங்கும் முற்றத்து வாழை இலைகளின் சாய்வும், உலர்ந்ததன்மையும் மனத்திற்குள்ளும் பிரதிபலிக்கின்றன. குருத்தைக் காத்துப் படை படையாய் அடுக்கிக்கிடக்கும் வாழைமடல்களைப் போலவே, மனதுள் ஆழ்ந்துகிடக்கும் நினைவுகளை, மறைத்து அர்த்தமற்ற எண்ணங்கள் படைகட்டிக்கிடக்கின்றன.

வாழைமரத்தின் ஓரமாக ஒரு சின்னஞ்சிறு குழந்தை நிற்கின்றாள். துறுதுறுத்த கணகள், அவனைக் கெஞ்சுவது போலப் படபடக்கின்றன, நீலநிறப் பாவாடையின் விளிம்பில் சிறுகண்களின் வடிவத்தில் பூ வேலைப்பாடுகள்.

அவளின் மிழகாய்ச் செவ்வரத்தை இதழ்த் துடிப்பில் அவளுடைய மன அடிவார எண்ணங்கள் வெளிப்படையாகின்றன· கண்களில் வேட்கை கனிய அவனை நோக்குகின்றாள்.

''வாரும்...''

அக்குரலின் மெதுமை பொங்கும் உற்சாகத்தில, அவள் சிற்றடிகளை முன்னே வைத்து நடந்து வருகின்றாள். பிஞ்சுக்கால்களின் மெத்தென்ற அடிகள், மனதினை பஞ்சணையில் துயில்விக்கும் மெதுமையையும் இனிமையையும் பெறச் செய்விக்கின்றன.

அவள், அவனிற்குப் பக்கத்தில் வந்து நிற்கின்றாள். அவளும் கௌரியைப் போலவே சாயல் பெற்றவள். அவளின் வட்ட வடிவமான முகத்தில் வேர்வை முத்துக்கள் பிறந்து உடைகின்றன. அவள், விரல் முனைகளால் தன்னுடைய வழுவழுப்பான கழுத்தைத் தடவுகின்றாள்.

''உமக்கு என்ன பெயர்?''

''......''

லால்
யின்
கின்ற

னம்.
கூர்ந்
பொ
தைக
ளின்
புலன

படங்

சலில்
மனம்
தூரின

ரும்"

டங்கு
வின்
வெ
பிரதி

இனி
நெடி
அர்த்
கூலப்

களாக்குவதுபோல, கீறிக் கிழித்துச் சிதல குதலப்படுத்தி...

மனம், பேயாய் பயங்கரக்கற்பனை கற்பித்து வெறியாட்டம் ஆடு கின்றது.

அவளுடைய கண்களை குறுக்கும் மறுக்குமாக பிளேட்டினால் வெட்டி சீறியிழுத்துச் சிதைக்க வேண்டு மென்ற வெறி முனைப்பு, நிமிஷத் துக்கு நிமிஷம் மன இயக்கத்தில் கொதிக்கின்றது.

அதே வேளையில் கணேஷின் நினைவில் கௌரி மெல்லரவாக தலையை நீட்டுகின்றாள்.

கௌரிதான் இவளா?

கௌரி சாகும் பொழுது அவ ளிற்கு வயது பத்து. இவளுக்கு...

கணேஷ் அவளைப் பார்க்கின் றான். இருபது வருடங்கள் வரை யில் உலகின் காட்சிகளை ரமித்த அவளும் அவனை விழிவெட்டிப் பார்க்கின்றாள்.

'அழகிய கண்கள், முதலில் அவை அழகாய்த்தானிருந்தன. ஆனால்...ஆனால்... அவற்றைமாங்காய் அரிவதுபோல கீறித்துகள்களாக்கி னால்...குத்திக் குத்திப் பிய்த்தெறிந் தால்...'

அவன் சூட்கேசைத் தடவுகின் றான். திட்டமிட்ட கொலைகாரனின் பதுங்கல், மன விழிம்பில் போர்வை யிட்ட பொழுதும், பயங்கரமான செய லாக்கி சுற்றுப்புற அடைப்புக்குள் உறுமிக்கொண்டே இருக்கின்றது.

## 2.

தூரிகையை எடுத்து அவன் உதறிக்கொள்ளுகின்றான். நிறக் கல வைக்குள் தூரிகை தேவையற்றுக் குழைகின்றது.

'எதைவரைவது?'

மழை, சனத்துப்
மின்னல் காட்டுநெ
கும் கோடு கட்டி வெட்ட
எரிக்கின்றது,
''ஐயோ...வந்திடு...
கௌரி கூவுகின்றாள்
குரல் ஓய முன்பாக அ
கின்றாள்;
''கௌ......கௌரீ.
கௌரி, மழைக்குள்
ஓடுகிறாள். ஓடும்
பாவாடைகிழிய, அவள்
யில் புரளும் கட்டைபே
முடன் அவன் நிற்கும்
குத்தாவுகின்றாள்...
அவன் பத்துவி
முகத்தை மூடிக்கொ
யாமலே எரித்த மொட்
போல நிற்கின்றான்.
''கணேஷ்...
என்ன...''
அவள் அவனை
கொண்டே கதறினாள்.
கண்களை மூடிய கைகளை
வில்லை.
''ஐயோ கௌரீ...
எரியுது.. எரியுது...
கண்கள்... ஐயோ...''
அதே போல,
இன்றும்.
முன்னைய துடிப்பு,
கட்டிலில்.
முன்னைய துடிப்பு ஓ
னிற்கு விழிகள் பொ
அவன் உலகைப் பார்க்க
பொழுது கௌரி அவனை
போய்விட்டாள்.

## 7.

'கௌரி இறந்துவிட்
அவனுடைய நேசம்

இருந்தாள். இப்பொழுது
துண்டுகள் குத்திக் கண்
த்துக் கட்டுப்போட்ட நிலே
வனுக்கு ஆஸ்பத்திரியில்
மையைப் பெய்விக்க ஒரு
லே!

## 8.

யுக்கு நேத்திரதானம்.
டைய விழிகளோ தெரி
த நல்லமனிதன் இறக்
ய தன்னுடைய கண்களை
க்குத் தானமாக வழங்கி
றந்துவிட்டான். அந்தக்
ணேஷிற்குப்பார்வையளிக்
ளாயின.

த்திரியை விட்டு அவன்
கின்றான்.

யாக அவன் வள்ளம்
_, திண்ணை ஆகிய எல்
பொழுதும் அவனது கண்
தெளிவாகத் தெரிகின்றன.

அணைக்கவும், அழைக்க
துக்கொண்டு அவனது
ன் நீண்டு, வீட்டு வாயிற்
வன் கால்களை எடுத்து
ன அது அங்கே நினை
ாகநிழலைப் படியவிட்டு
ந்தேவிட்டது.

ணயில் நின்று கூவிய
ா டையணிந்த அந்தக்

---

இதயமே அலறியது;
து காற்றால் அடித்து
குகளாய், மனதுள் நிறைந்
ப்பெல்லாம் கணப்பொழு
வேரறுந்து, வாடியுதிர்ந்து
பன் கைகளிரண்டையும்,
சியாக நின்ற இடத்தினை
டிக்கொண்டே கூவினான்:
ரீ... கௌரீ... உன்னை
ணமுடியாத நிலையினில்
ாயேடி......இனி எனக்கு
ாடி... என்றை கௌரீ...



க்ஷவர அலகின் இருபுறக் கூர்மையும் கைகளை உராசுவதைப்போலக் கணேஷிற்கு மனப்பிரமை. வெளிக் காட்சிகளில் கண்பதித்திருக்கும் அவனது நினைவில், பழைய எண்ணங்கள் துயில்விட்டெழுந்து நடமாடும் மனிதவேகத்தில் செயல்படுகின்றன...

இலக்கியவகுப்பு நடந்துகொண்டிருக்கிறது. ஆசிரியர் காவியநாயகி



ஒருத்
பித்
அவ
னைப்ப

களை
மௌ

படர்
கடை

ல் வந்து
ம்
கமும்”
190- 191
என்னும்
தறிப்பிடு
யெடுத்த
இருந்த
.பி,113ல்
ன். ஒரு
கு நகர்
து, ஒரு
கேட்டுத்
மணியின்

அழுகைக்குரிய காரணத்தை அறியும்பொருட்டு அழுகுரல்வந்த இடத்திற்குச் சென்றான். அவ்வம்மையை விசாரித்தான். சோழ அரசனால் பல ஆண்டுகட்கு முன்னர் சிறைப்படுத்திக் கொண்டுசெல்லப் பட்ட தன் பிள்ளைகளை நினைந்து வருந்துவதாக அவ்விதவை மொழிந்தாள். அதைக் கேட்டுக் கயவாகு சீற்றமடைந்தான். பழி வாங்கத் திட்டமிட்டான். பெரும் படையைத் திரட்டிக்கொண்டு சோழநாட்டின்மீது படையெடுத்தான். அதற்குள் கரிகாலன் மறைந்தான். கயவாகுவிடம் சோழர்படை தோல்வியுற்றது. கயவாகு பன்னீராயிரம் சிங்களவர்களைச் சிறைமீட்டதோடு, தமிழர்களையும் உடனழைத்துக்கொண்டு போய் இலங்கையில் குடிவைத்தான்.

(தொடரும்).





முயற்
கொன

கடினமான
முயற்சி ஆ
வாரத்தின்
டியே இந்
பௌதிக
குத் தனி
பொருட்க
வரை மிகக்
தயாரிக்கப்
தொழிலின்
மதிப்புள்ள
பதுடன்,
அடையும்
கின்றது.

இல்

இலங்கை
287, காலி வி

Ceylon
287, C

ல்லுவாள்.
ாகதாளிப் பழத்தைப்
ிற்குக் கொடுப்பான்.
ழுது அப்பழத்தினுள்
லை முள்ளை அவன்
யாய் தோண்டியெடுப்
பார்த்தபடியிருப்பாள்.
தைத்தின்னும்.
ளது சின்னஞ்சிறிய
தாளிப்பழத்தின் செங்
நிறம் மாறிக்கொண்

ரி இன்று அவன்
ல்லை; சிலையான அவ
நெஞ்சிற்குள்ளேமட்டும்,
அறுகம்புல்லாய் வலித்
ங்கி எறியமுடியாது
இறுகியேவிட்டாள்.
ச் சிநேகிதியற்ற நிலை
ஆண்டுகள் கழிகின்
ல்லாம் விரக்தியாயும்,
மே கழிந்துபோயின.
ழகிய ஓவியம், அவன்
கள், அவன் பார்க்கும்
கிய எல்லாமே அவ
க்குள் ஏறி இறங்கும்
அவனுக்கு நெஞ்சுள்
லை கக்கி எரிந்து
க்கும்.

## 9.

திரிக் கட்டிலில் உடல்
ழுது, மனதுள் சிறு
னத்தோடு விழுந்த
ஏற்பினை மனதுள் ஏற்
ல அவனை இடை
புறுத்திக்கொண்டிருக்

ஒன்றுமேயில்லை, வாழ்
மையில்லை' அலுக்கும்

புரிந்த போதிலும், அவன் வெளிநாட்டான் என்ற காரணத்தால் சிங்களவர்களுக்கு அவன்மீது உள்ளூற வெறுப்புணர்ச்சி தோன்றி வளர்ந்து வந்தது. கி. மு. 161ல் சிங்கள இளவரசனை துட்டகெமுனு புத்தசமயத்தைக்காப்பதற்காகச் சிங்களவர்களை ஒன்று சேர்த்துப் பெரும்படை திரட்டி, ஏலேலசிங்கனை எதிர்த்துப் போரிட்டான். போரில் வெற்றியும் பெற்ருன். ஏலேலசிங்கன் முதுமையுற்றிருந்ததால், எளிமையாகப் போரில் துட்டகெமுனு வெற்றிபெற்ருன்.

துட்டகெமுனுவிடம் தோல்வியுற்ற தமிழர்கள் மனச்சோர்வு அடையாது தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வலிகம்பா (கி.மு,) 104-88) காலத்தில் வேறுசில தமிழர் படையெடுத்து வந்தனர்; இலங்கை அரசனை நாட்டைவிட்டுத் துரத்தினர்; தாங்களே அரசாளத் தொடங்கினர். கி. மு. 104முதல் 88 வரை ஐந்து தமிழ் மன்னர்கள் இலங்கையை ஆண்டார்கள். மீண்டும் சிங்களவர்களுக்கும் தமிழருக்கும் இடையே போர் மூண்டது. சிங்களவர் அரசைக் கைப்பற்றினர் கி. மு. முதல் நூற்ருண்டில் வட்ட காமினி என்பவன் இலங்கையின் அரசனுனன். அவன் ஆட்சிக்கு வந்த ஐந்தாவது மாதத்தில் பாண்டிய மன்னன் இலங்கையின்மீது படையெடுத்துவந்தான். போரில் தோல்வியுற்ற வட்ட காமினி மலைப்பகுதியில் சென்று மறைந்துகொண்டான். அதுமுதல் பதினன்கு ஆண்டுகள் இலங்கை பாண்டியரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதன்பிறகு திடீரென்று வட்ட

காமினி
பாண்டிய
நிதி'யை
ஆட்சியை

## 3. க
இ

கி
னெடுங்க
ழக வே
பலமுறை
முன்பு க
காலத்தி
என்னும்
ரையில்
பிடித்தக்
கள் அக
நற்றிணை
யிலும் (18
றன.

சோ
சிறந்து
இலங்கை
சென்று
சிங்கள
சிறைப்ப
கொ
அவர்களை
காலப்
கண்டு
காவிரிய
நீண்ட க
காவிரி
அணை
பெற்று
சிராப்ப
லணை
என்பர்.

கரி
கையிலி

தையை 'பொம்ம'வைத்திருக்கும் தும்புகளெல்லாம் சிறு சிறு ஊசிப் பாம்புகள் போல அவன் மயிர்க் கண் களுள் புகுவதாய்...

வெடுக்கென்று, எதையோ அவன் முதுகிலிருந்து நூல் போல இழுத்துக்கொண்டு கட்டிலிலிருந்து எழுந்தான். கண்ணோடு அதைப் பார்க்காமல் தூரவே வீசியெறிந் தான்; அது மெத்தை நூல்தான்.

அவன் உடலெல்லாம் பதறி நடுங்கியது. மயிர்க்கண்களெல் லாம் வியர்வை பீறிட்டு அரும் பியது.

எழுந்து நின்றவன், இருட்டிற் குத் தன்னுடைய கண்களைப் பழக்குகின்றான்.

மின்மினிப்பூச்சிகள், நெருப்புக் கொள்ளியின் தட்டலில் பறக்கும் பொறிகளாய் இருளில் ஜ்வலிக்கின் றன. அவை அவனை நையாண்டி செய்கின்றன. அவற்றைப் பிடித்துக் கையினுள் நசித்து, பெருவிரலால் நிலத்தோடு தேய்த்து உரஞ்ச வேண்டுமென்ற வெறி அவனுள் சன்னதமாடுகின்றது.

அவன் மெல்ல மெல்ல நடக்கின் றான்.

டக்...டக்...டக்—

யன்னலோரம்.

திரைச்சீலைகள்சலசலக்கின்றன.

யன்னற் கண்ணாடியினூடு இரண்டு நீளுருவங்கள் ஒன்றோ டொன்று பின்னிக்கொழுவி, இடை யிடை நிமிர்வது போல கண்ணாடிற் குள் ஒன்று தோற்றங் காட்டுகின் றது. பிறகு அந்த நிழல் அழிய, இன்னொருஉருவம்நெளிந்து, நெளிந் து அவனதுகண்களுக்கு நேராகசூனி யத்தை ஊடுருவி வருவது போல...

(அது கண் கொத்திப் பாம்பே தான்...கண்கொத்தி—கண்கொத்தி:)

"ஐயோ என்ரை கண்கள் போச் சே..."

அவன் கயிற்றின் முறுகலிலிருந்து குதித்துச் சுழரும் பம்பரமாய் திசை கெட்டுத்தடுமாறி கண்ணாடி யன்ன லோடு மோத – கண்ணாடி யன்னல் சில்லவல்லமாய் உடைந்து, அதைப் பினில் எத்துண்டு. கண்ணாடிச் சித றல்கள் அவன் முகத்திலும். கண் களிலுமாகக் கூர்முனையிறுக்கிக் கிழித்து, இரத்தத்தை முகத்திலி ருந்து வடிந்து பெருகவைத்தன... அவன், கதறிக்கதறி உடலை உலுப் பிய பரிதாபத்தில் ஆஸ்பத்திரியே ஒரு முறை பெருமூச்செறிந்தது.

ஏற்கனவே பலவீனமுற்றிருந்த கண்கள் பயமும், மருட்சியும் கொண்ட நடத்தையில் கௌவி விழுங்கப்பட்டன.

## 10

கண்களின் கட்டுக்கள் அவிழ்க் கப்படுகின்றன. அவனிற்குக் கைத் தாங்கலாக இருவர் அவனுக்குப் பக்கத்தில் வருகின்றார்கள்.

துயரத்தின் அலறல்; சூழலில் மௌனம்,

கண்ணென்ற நினைப்பு அற்று, வெறும் இருள்தான் எங்கும். எல் லாம் திசைகளிலிருந்தும் எழும் ஒலிகளின் உதவியினாலேயே இயக் கங்களாய் உற்பவிக்கின்றன.

இருளுக்குள் கிடந்து, இருளுக் குள் எழுந்து, அவன் இருளுக்குள் ளாகவே நடக்கின்றான்.

மனதில், வரண்ட காற்று சூரு வளி எழுப்புகின்றது.

கௌரி?

அவள்தான் அவனுக்கு எல்லா

மாக இருந்தவள். அவனின் பிஞ்சு நெஞ்சச் சிலேற்றிலே, அவள் தன்னுடைய நினைவுகளையெல்லாம் ஆணியினால் இறுக்கிக் கீறிவிட்டுப் போய்விட்டாள்.

அவளே அவனுக்கு எல்லாமாயிருந்தாள். எல்லாமென்றால் உலகமாயிருந்தாள். இனி, அவள் அவனுடைய மனதுள்ளேயே நிதமும் நின்று வாழப்போகின்றவள்,

அவனுடைய மனம் தடுமாறித் தத்தளிக்கின்றது.

கௌரியினுடைய கண்கள்!

'அவை எவ்வளவு அழகிய கண்கள். நீண்டு ரேகையிட்டிருக்கும் கருரோமப் புருவக் கீற்றுக்கள். அவற்றின் கீழே வெண்விழிப் பரப்பில் சுழலும் அந்தக் கருமணிகள்...''

தட்டுத்தடுமாறும் ஓசையின் ஊடே சின்னஞ்சிறு காலடியரவத்தின் ஒலி, சிற்றிலைச் சலசலப்பாய் கேட்கின்றது. கௌரியின் பாதசர ஒலிபோல, அதன் ஒலி ஒலிக்கின்றது.

கணேஷ் முன்னால் போகும் ஒலியைத் தொடர்கின்றான். அவனைப் பக்கத்தில் தாங்கிச் செல்பவர்கள் அவனின் வேகத்திற்கேற்ப துரிதமாக நடக்கின்றனர். முன்னால் கேட்கும் ஒலியினை எழுப்பி, அவனை அவனுடைய வீட்டிற்கு வழிகாட்டி அழைத்துச் செல்பவள் அவனுடைய கௌரியா?


நினைவுமலர்கள் வெளியிடுவோரே!

பாடசாலை அதிபர்களே!

புத்தக ஆசிரியர்களே!

பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்

சிறந்த 'புளக்'குகள்

செய்யவேண்டுமானால்

எங்களுக்கு எழுதுங்கள்.

**Sri Lanka Block Makers**

131, MESSENGER STREET, COLOMBO.

# தென்னிந்தியாவும் தொல்லிலங்கையும்

(சித்திரை இதழ் 71 பக்கத் தொடர்)

## 2. ஏலேல சிங்கனும் ஈழமும்.

தேவனம்பி(ரி)ய திசனுக்குப் பிறகு அவனுடைய நான்கு தம்பிகள் அடுத்தடுத்து இலங்கையை ஆண்டனர். இறுதியாக ஆண்ட அரசர்களிருவர் காலத்திலும் தமிழருடைய கை மேலோங்கியது. தமிழகத்துச் சோழ அரசனின் படைத் தலைவனான ஏலேல சிங்கன் (Elara) கி. மு. 215 அளவில் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றான். சிங்கள மன்னனைத் துரத்திவிட்டு நாற்பது ஆண்டுகள் சிறப்புடன் ஆட்சி புரிந்தான். அவன் தமிழனாக இருந்த போதிலும் சிங்கள மக்கள் எல்லோரும் கண்டு வியக்கும் வண்ணம் நடுநிலை பிறழாது செங்கோலோச்சினான். தமிழகத்தில் மனுநீதிச் சோழனைப்பற்றி வழங்கும் கதையைப்போல், இவனைப்பற்றி இலங்கையில் ஒருகதை வழங்கி வருகின்றது.



த. திருநாவுக்கரசு எம். ஏ. (தமிழ்); எம். ஏ. (வரலாறு) எம். லிட், டிப்ளோமா (மொழி)

தன் அரண்மனை வாயிலில் ஏலேலன் ஒருமணியைக் கட்டிவைத்திருந்தான். அரசனிடம் தங்கள் குறையை முறையிட விரும்புகின்றவர்கள் இம்மணியை அடித்ததும் அரசன் வந்து விசாரிப்பான். ஒரு நாள் இவ்வரசனது 'ஒரு குலத்திற்கு ஒரு மைந்தனாக' விளங்கிய இளவரசன் வெளியே சென்றபொழுது ஒரு கன்றுக் குட்டியின் மீது தன்தேரை ஓட்டிவிட்டான். கன்று இறந்துவிட்டது. சொல்லொணாத்துன்பத்திற்கு ஆளாகிய தாய்ப்பசு சீற்றங்கொண்டு அரண்மனைக்கு ஓடியது. அங்கு வாயிலிலிருந்த மணியை ஆட்டிற்று. உடனே அரசன் ஓடோடிவந்தான். பசுவின் கண்ணீரைக் கண்டு உள்ளம் நைந்து உருகினான். பிறகு நிகழ்ந்ததை அறிந்தான். தனது ஒரே மகனை அத்தேரின் சேக்கரத்திலிட்டுத் தண்டித்தான். இதைப் போன்று வேறுபல கதைகளும் ஏலேலசிங்கனின் அறநெறிப் பிறழாத ஆட்சியை விளக்கும் வகையில் மகாவமிசத்தில் கூறப்படுகின்றன.

ஏலேல சிங்கன் செங்கோல்

புரிந்த போதிலும், அவன் வெளி நாட்டான் என்ற காரணத்தால் சிங்களவர்களுக்கு அவன்மீது உள்ளூற வெறுப்புணர்ச்சி தோன்றி வளர்ந்து வந்தது. கி. மு. 161ல் சிங்கள இளவரசனை துட்ட கெமுனு புத்தசமயத்தைக்காப்பதற்காகச் சிங்களவர்களை ஒன்று சேர்த்துப் பெரும்படை திரட்டி, ஏலேல சிங்கனை எதிர்த்துப் போரிட்டான். போரில் வெற்றியும் பெற்றான். ஏலேலசிங்கன் முதுமையுற்றிருந்ததால், எளிமையாகப் போரில் துட்டகெமுனு வெற்றிபெற்றான்.

துட்டகெமுனுவிடம் தோல்வியுற்ற தமிழர்கள் மனச்சோர்வு அடையாது தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வலி கம்பா (கி.மு,) 104-88) காலத்தில் வேறுசில தமிழர் படையெடுத்து வந்தனர்; இலங்கை அரசனை நாட்டைவிட்டுத் துரத்தினர்; தாங்களே அரசாளத் தொடங்கினர். கி. மு. 104முதல் 88 வரை ஐந்து தமிழ் மன்னர்கள் இலங்கையை ஆண்டார்கள். மீண்டும் சிங்களவர்களுக்கும் தமிழருக்கும் இடையே போர் மூண்டது. சிங்களவர் அரசைக் கைப்பற்றினர் கி. மு. முதல் நூற்றாண்டில் வட்ட காமினி என்பவன் இலங்கையின் அரசனானான். அவன் ஆட்சிக்கு வந்த ஐந்தாவது மாதத்தில் பாண்டிய மன்னன் இலங்கையின்மீது படையெடுத்துவந்தான். போரில் தோல்வியுற்ற வட்ட காமினி மலைப்பகுதியில் சென்று மறைந்துகொண்டான். அதுமுதல் பதினான்கு ஆண்டுகள் இலங்கை பாண்டியரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதன்பிறகு திடீரென்று வட்ட காமினி நாட்டினுள் நுழைந்து பாண்டிய மன்னனின் அரசப் 'பிரதிநிதி'யைக் கொன்று இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றினான்.

## 3. கரிகாலன் கண்ட இலங்கை:

கிறித்து பிறப்பதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழக வேந்தர்கள் இலங்கையைப் பலமுறை கைப்பற்றி ஆண்டதை முன்பு கண்டோம். மேலும் சங்க காலத்தில் ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் பெருந்தகை மதுரையில் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் பாடிய பாடல்கள் அகநானூற்றிலும் (88,231,307) நற்றிணையிலும்(366), குறுந்தொகையிலும் (189,343,360) காணப்படுகின்றன.

சோழப் பேரரசர்களுள் தலை சிறந்து விளங்கிய கரிகாற் சோழன் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்று பெரு வெற்றிபெற்றான். சிங்களவர் பன்னீராயிரவரைச் சிறைப்படுத்தித் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தான். அவர்களைக் கொண்டு தற்காலப் பொறியியல் வல்லுனர்கள் கண்டு வியக்கத்தக்க வகையில் காவிரியாற்றுக்குப் பெரியதொரு நீண்ட கரை அமைத்தான். மேலும் காவிரியாற்றில் சிறந்ததொரு அணையைக் கட்டிப் பொன்றாப் புகழ் பெற்றான். இக்காலத்தில் திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள 'கல்லணையே' கரிகாலன் கட்டியது என்பர்.

கரிகாலன் காலத்தில் இலங்கையிலிருந்து உணவுப் பொருட்கள்

காவிரிப்பூம் பட்டினத்தில் வந்து குவிந்ததை,

“கங்கை வாரியும்
காவிரிப் பயனும்
ஈழத்து உணவும்
காழகத்து ஆக்கமும்”

—பட்டினப்பாலை 190- 191

என்று பத்துப்பாட்டு என்னும் பழந்தமிழ் இலக்கியம் குறிப்பிடு கிறது,

கரிகாலன் படையெடுத்த காலத்தில் சிறுபிள்ளையாக இருந்த கயவாகு (கி.பி.113–173), கி.பி,113ல் இலங்கையின் அரசனுனன். ஒரு நாள் நள்ளிரவில் கயவாகு நகர் சோதனைக்கு வந்தபொழுது, ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டுத் திடுக்கிட்டான். அப்பெண்மணியின் அழுகைக்குரிய காரணத்தை அறியும்பொருட்டு அழுகுரல்வந்த இடத்திற்குச் சென்ருன். அவ்வம மையை விசாரித்தான். சோழ அரசனுல் பல ஆண்டுகட்கு முன்னர் சிறைப்படுத்திக் கொண்டுசெல்லப் பட்ட தன் பிள்ளைகளை நினைந்து வருந்துவதாக அவ்விதவை மொழிந்தாள். அதைக் கேட்டுக் கயவாகு சீற்றமடைந்தான். பழி வாங்கத் திட்டமிட்டான். பெரும் படையைத் திரட்டிக்கொண்டு சோழநாட்டின்மீது படையெடுத் தான். அதற்குள் கரிகாலன் மறைந் தான். கயவாகுவிடம் சோழர்படை தோல்வியுற்றது. கயவாகு பன்னீ ராயிரம் சிங்களவர்களைச் சிறைமீட்ட தோடு, தமிழர்களையும் உடனழைத் துக்கொண்டு போய் இலங்கையில் குடிவைத்தான்.

(தொடரும்).






## 5

## வாளை உருவினர்

விளைந்து விளைந்து செல்லும் சிங்க நாட்டு வீதியிலே சென்று கொண்டிருந்த வீரர்களைக் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்த மக்கள்—

'இளவரசர்களே! வெற்றியுடன் திரும்பி வாருங்கள்!!' என்று வாழ்த்தினர்கள்; பக்கம் பக்கமாகக் குதிரையிலே வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்த இளவரசர்களில் இளையவனுன கணேந்திரன்—

தன்பக்கத்தே வந்து கொண்டிருந்த சகோதரன் மகேந்திரனை அளவுக்கு மீறிய ஆத்திரத்துடன் பார்த்தான்.

ஆனுல்—

மகேந்திரன் அப்படிக் கணேந்திரன் பார்த்துவிட்டான் என்பதற்காகச் சினம் கொள்ளவில்லை; அதற்காக, அவன் தன் தம்பிமீது சீற்றமும் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, இப்போது அவன் உள்ளத்திலே தாங்கமுடியாத துயரம் குடிகொண்டிருந்தது.

'தனது தந்தை வயது சென்றவர்; ஒரு சிறிதளவு துக்கத்தையுமே தாங்கமாட்டாதவர்; எமது பிரிவினுல் அவருக்கு ஏதாவது........,—என்று அவன் மனசு சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது. அதை எண்ணி வேதனைப்பட்டபோது, அவன் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் சொட்டத் தொடங்கின.

மகேந்திரன் திரும்பவும் சிங்க நாட்டு அரண்மனைக்குச் சென்று விடுவோமோ என்று எண்ணினுன். அப்படித் திரும்பி அங்கேபோனுல்

தன் தந்தை இன்னும் மிகக்கலங்கி, உயிரையே விட்டுவிட்டால்...... என நினைந்து பொங்கி வரும் துக்கத்தை அடக்கிக்கொண்டான்.

கணேந்திரன் தன் பெற்றோர் கள் மேல் உயிரையே வைத்திருந் தான்.

ஆனால்—

இந்த 'அரச பதவி' என்ற மோகம் அவனை பிடித்தநாள் தொட ங்கி அவனுக்கு மற்றைய எதுவுமே பெரிதாகப்படவில்லை; இதனால், அவன் உள்ளம் அவன் பெற்றவர் களை எண்ணவுமில்லை; கலங்கவு மில்லை.

இதுவரை நேரமும் ஒன்ருகவே சென்று கொண்டிருந்த இளவரசர் களில் இளையவனை கணேந்திரன் திடீரென்று சென்று கொண்டிருந்த பாதையைவிட்டு வேருெரு பாதை யால் குதிரையைச் செலுத்தினன்.

நினைவையெல்லாம் சிங்க நாட்டு அரண்மனையிலே இருக்கும் தன் பெற்றவர்களில் வைத்திருந்த மகேந் திரன், கணேந்திரன் வேறு பாதை யிலே குதிரையைச் செலுத்திக் கொண்டிருப்பதைக் கண்டதும்—

உடனே தன் தம்பி கணேந் திரன் சென்று கொண்டிருக்கும் பாதை வழியாகவே தன் குதிரையை யும் திருப்பினன்.

இதற்குக் காரணம்—

கணேந்திரன் முன் பின் என்ன நேரிடும் என்று சிந்திக்காமல் செய லாற்றும் சுபாவமுடையவன். அதனல் சில சமயங்களில் ஆபத்துக்குள்சிக்க நேரிடலாம். எனவே-அவன் அப்படி ஏதாவது ஆபத்திற்குள்ளாகும்போது, அவனைக் காப்பாற்றலாம் என்ற எண்ணத்தில் தான் நல்ல உள்ளம் படைத்த மகேந்திரன் அவன்பின்னே தொடர்ந்தான்.

காற்றைவிட வேகமாக அவன் குதிரை சென்று கொண்டிருந்தது, மகேந்திரனும் தன்தம்பியைத்தொட ரவேண்டும் என்பதற்காகத்தன் குதி ரையை மிகவும் வேகமாகச் செலுத் திக் கொண்டிருந்தான்.

கணேந்திரன் எப்படிக் களையா மல் வெகுதூரம் செல்லமுடியும்? அவன் மிகவும் களைத்தேவிட்டான். களைத்த அவன்—

எங்காவது இளைப்பாறுவதற் கேற்ற இடம் இருக்கிறதா என்று பார்த்தான்; கண்களை நான்கு பக்க மும் சுற்றவிட்டான். அவன் கண்க ளுக்கு—

தூரத்தே ஒரு பாழடைந்த மண் டபம் தெரிந்தது. அவன் உள்ளம் சோர்வடைந்து – மிகவும் களைத் திருந்தபடியால், அங்கே ஏதாவது ஆபத்துவரும் என்ற எண்ணமே வரவில்லை. குதிரையை விட்டு இறங் கிய அவன், ஒரு மரத்தில் குதிரை யைக் கட்டினன்.

நூறுயார் அளவு தூரத்தேயிருக் கும் அந்தப் பாழடைந்த மண்ட பத்தை நோக்கி நடக்கத்தொடங்கி ஞன்.

அப்போது—

தன் தம்பி பாழடைந்த மண்ட பத்தைநோக்கி நடந்துகொண்டிருப் பதைக் கண்டுவிட்ட மகேந்திரன் குதிரையைவிட்டு இறங்கினன்; மர மொன்றில் குதிரையைக் கட்டிவிட் டுத், தன் தம்பியைத் தொடர்ந்தான்.

ஃ ஃ ஃ

மன்னர் இராஜவர்மன் தான் தவம்செய்துபெற்றெடுத்த புதல்வர்க ளைப் பிரிந்தமீளாததுயரத்திலேராணி பவளவல்லியின் அந்தப்புரத்திலே

இருக்கிறார்; ராணி பவளவல்லி அழுதுகொண்டே—

''கமலி! நீ போய் முதல் மந்திரியை அழைத்துவா— உடனடியாக!" என்றாள், தன் அருகே நின்ற தோழி ஒருவளைப்பார்த்து.

சிறிதளவு நேரஞ் சென்றதும்—

முதல் மந்திரி கஜபதி தனக்கே உரித்தான கம்பீரமான தோற்றத்துடனும், எடுப்பான நடையுடனும் அங்கே வந்தார்.

''ராணி! அழைத்தீர்களாமே!" என்று மிகவும் பணிவாக— தாழ்மையாகக் குரல் கொடுத்தார், மந்திரி அமைச்சரின் குரல்கேட்ட ராணி பவளவல்லி கண்களிலே சிந்திக்கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, ''ஆமாம்; நான் தான் உங்களை அழைத்தேன். ஒரு முக்கியமான விஷயமொன்று!" என்றாள்.

''சொல்லுங்கள்— எதுவானாலும் செய்யக் காத்திருக்கிறேன்!"— மந்திரி.

''எனது செல்வங்களைப் பிரிந்த பின்னர் என்னால் நிம்மதியாக— மகிழ்ச்சியுடன் இருக்க முடியவில்லையே!"—ராணி.

''மீண்டும் மீண்டும் ஏன் பழைய பல்லவியைப் புரட்டுகிறீர்கள்? உங்கள் செல்வங்கள் மாண்டா விட்டார்கள்? அவர்கள் என்ன சிறு குழந்தைகளா? ஒரு நாட்டை ஆளப்போகிறவர்கள் அல்லவா— இனியும் அதை எண்ணிக் கவலைப்படாதீர்கள்; அவர்கள் வெற்றியுடன் திரும்புவார்கள்''—மந்திரி ஒரு சிறு பிரசங்கத்தையே செய்து விட்டார்.

''எப்படியிருந்தாலும் எனக்கு அவர்கள் சிறு குழந்தைகள்தான்! நான் உங்களைக் கூப்பிட்ட விஷயம்...... அதுதான் உங்கள் மகள் இந்திராவை இன்றுமுதல் என்னுடனே விடுங்கள்''

மந்திரி எதுவுமே பேசாதிருப்பது கண்ட மன்னர், தன் அமைதியைக் கலைத்துக்கொண்டு—

''அமைச்சரே! உங்கள் மகளை என் மனைவிக்குத் துணையாக விடுங்கள்! உங்களுடன் இருந்தாலென்ன— எங்களுடன் இருந்தாலென்ன— எல்லாமே ஒன்றுதானே! இளவரசர்களைப் பிரிந்த துக்கத்தில் மிகவும் கலங்கி இருக்கிறாள். எனவே... " என்று இழுத்தார்

மந்திரி மகிழ்ச்சி தாங்கமுடியாமல்—

''மன்ன! நான் பாக்கியசாலி. கரும்புதின்னக் கூலியா வேண்டும்? இன்றே எனது மகள் இந்திராவை அனுப்பிவைக்கிறேன். அவளை—அதுவும் வருங்காலத்தில் இந்நாட்டு அரசியாக வர இருக்கும் அவளை— உங்களுடன் விடுவதற்கு நான் மறுப்பேனா?" என்றார்.

மன்னரும் ராணியும் சிறிது மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்கள்; மந்திரியும் விடைபெற்று தன் இடத்தையடைந்தார்,

∴ ∴ ∴

**பா**ழடைந்த மண்டபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கணேந்திரனுக்குக் கிட்டக் கிட்டச் செல்ல பயம் மனதிலே உருவெடுக்க ஆரம்பித்தது.

காரணம்—

அவன் காதுக்குப் பயங்கரமான ஒலிகள் மண்டபத்திலிருந்து வெளிவந்து கேட்டுக்கொண்டிருந்தது. என்றாலும், அவன் மண்டபத்தின் வாசலை நோக்கி நடந்தான்.

மகேந்திரனும் அவன் பின்னே தொடர்ந்துகொண்டிருந்தான்.

மண்டபத்தின் வாசலை அடைந்த கணேந்திரனுக்கு இதயமே வெடித்து விடுவதுபோல இருந்தது; அவனை அறியாமலேயே உறையில் செருகியிருந்த வாளை எடுத்தது அவன் கை.

மகேந்திரனும் வாசலை அடைந்தான்; அவனும் வாளை உருவினான்.

(தொடரும்)



# வறுமைக்கு வழிகாணும் மனிதன்

-அம்பி-

கற்காலக் கார்சூழ்ந்த நெஞ்சில் — அறிவுக்
கதிரோடி ஒளியேறிக் கவினூற இன்பப்
பொற்காலப் புவிகண்ட மனிதன் — மெய்ப்
பொருள்கண்டு நிறைவெய்தப் புலனின்மை கண்டான்!
முற்போக்கு முழைகொண்ட நெஞ்சில் — மேன்மை
முறைநின்று முரணின்று முழுஉண்மை காணும்
நற்போக்கு நெறிநின்று வாழ்வின் — மெய்ம்மை
நலனூறி உணர்வோட நரம்பின்மை கண்டான்!

⚜ ⚜ ⚜

இடைவானில் படகேறிச் சென்று — விண்ணில்
இயல்போடு உறவாடி இணைவாகிக் கொண்டும்
அடிவானின் மடிதேடிச் சென்று — அங்கு
அணுவோடு விளையாடி அணைவாகிக் கொண்டும்
நெடுவானின் முடிதேடிச் சென்று — மனிதன்
நிலவோடு நடமாடி நிதிதேடிக் கொண்டும்
கெடுவானின் கலிநெஞ்சங் கொண்டு — நச்சுக்
கெறுவங்கொண் டழிகின்ற முடமாகிக் கொண்டான்!

⚜ ⚜ ⚜

பூமிக்கு மேன்மேலே சென்று — உந்திப்
புவியீர்ப்புக் கப்பாலே அப்பாலு மெங்கோ
சீமைக்குச் சென்றீட்டுஞ் செல்வம் — நெஞ்சைச்
சிறைவைத்து உணர்வற்றுச் சிதைவெய்த வாமோ?
வாய்மைக்கு முண்மைக்கும் மீறி — நெஞ்சில்
வளமின்றி வறுமைக்கு வழிகாணும் மனிதன்
ஊமை செவிடாகி னானே? — கொல்லன்
உலைபோன்ற உளமுள்ள உலகாள்கின்றானே!

# நாகஸ்வரம் பத்மநாதன்

இசைக் கருவிகளுட் பழமை யான நாதசுரம் நாம் அடிக்கடி சந்திக் கக்கூடிய வாத்தியமாகும். மனதிற்கும் செவிக்கும் இன்பம் தரத்தக்க கான ரசத்தை இவ்வாத்தியம் அள்ளிச் சொரிவதோடு சில புண்ணியவான் களின் உதவியால் கர்ணகடூரமான வெறுப்புணர்ச்சித்தொனியை விசிறி விடுவதையும் பல சந்தர்ப்பங்களில் அனுபவித்திருப்போம்.

இக் குணகுற்றமெல்லாம் பாவம், வாத்தியத்தைப் பொறுத்தனவல்ல. கையாள்பவரின் இசைஞானபலமும், குருவருளும் சேர்ந்தபின்னர் மக்கள் ஆதரவும் கிட்டிவிட்டால் இதன் சங் கதியைக் கேட்கவேண்டாமே! இன் னிசை பிறந்து இன்பந்தரத் தவறவே தவருது.

வட இலங்கையிலுள்ள ஒரு சிறிய கிராமமான அளவெட்டியூரில் பிறந்தவரான திரு. பத்மநாதனுக்கு அருமையான வாய்ப்பாகச் சிறந்த குருவும், வசதியான சூழ்நிலைகளும் கிடைத்ததோடு இயல்பாகவே அபார மான சங்கீதஞானமும் பொருந்தி யிருந்தகாரணத்தால் இன்று பிரகாச மான வித்துவானுக மிளிர்கின்றார். நாமும் மனோரம்மியமான இன்னிசை யைப் பருகும் வாய்ப்பைப் பெறுகின் ருேம்.

சுமார் முப்பத்திரண்டுவயது மதிப்பிடக்கூடிய பத்மநாதன் இளமை யில தனது தந்தையாரான வித்து வான் கந்தசாமிப்பிள்ளை அவர்களி டம் நாதசுரப் பயிற்சியைப் பெற்றவர். சில காலஞ் சென்ற பின்னர் அப் போது புகழ்பெற்றிருந்த வித்துவான் எஸ். பி. எம். திருநாவுக்கரசுப்பிள்ளை யவர்களிடம் பாடம்கேட்கும் வாய்ப்பு இவருக்குக்கிட்டியது. தமது மாணவர் களுக்கு ஒழிவு மறைவின்றிச் சகல இசைநுட்பங்களையும் வழங்குபவ ரான பிள்ளை சிறந்த ஞானத்தராகிய பத்மனிடம் மட்டற்ற அன்புவைத்து மிக நன்ருக உழைத்துப் பயிற்றினர் கள். குருபக்தியில் சிறந்த இளைஞருக் குக் குருவருளும் அபரிமிதமாகக் கிடைத்தது. இருபேரும் சேர்ந்து வெளியே கச்சேரிகளுக்குச் சென்று வாசிக்கும் காலம வரவே பத்மநாத னின் புகழ் குறிப்பிடத்தக்க அளவில் உயர்வதாயிற்று. "தனது சிஷ்யனின் புகழ் தனது புகழ்" எனக் கருதிய பிள்ளை மனம்விட்டுப் பேசித் தன் மைந்தனைப் பாராட்டுவதுபோலப் பாராட்டலானுர்.

பல வித்துவான்கள் தமக்குக் கிடைக்கக்கூடிய ஆரம்பபுகழைவைத் துப் பொருள் முதலிய வசதிகளை உயர்த்திக் கொள்வதற்காகப் பட்டி னப் பகுதிகளுக்கு ஜாகை வசதிதேடி ஓடுகிருர்கள். "கரும்பு கண்டோடு இருந்தால் எறும்பு தானே வரும்" என்பார்களே அவ்வாருக நமது பத்மநாதன் அச்சிறிய கிராமத்தை விட்டு நிலைபெயராத போதும் கச்சேரி ஏற்பாடு செய்பவர்கள் பலர் அங்கே தேடிச் சென்று காரியம் பார்க்கின் ருர்கள்.

திருவாவடுதுறை, திருவெண் காடு, திருவீழிமிழலை காருகுறிச்சி என்று சில இடப்பெயர்களைச் சொன்ன மாத்திரத்திலேயே ஆங் காங்குள்ள பிரபல வித்துவான்களைப் பொதுமக்கள் புரிந்து கொள்வது

அறிமுகப்படுத்துகிறோம்!

**கோடைக்கேற்ற குளிர்பானம்**

புத்தம் புதிய
“சம்மர் ட்றிங்க்”

பெண்மணிகளும் குழந்தைகளும் அதிக விருப்புடன் பருகும் பானம்.

தாகம் ஏற்படும்போது
**“சம்மர் ட்றிங்க்”**
என்றே கேளுங்கள்.

**சுப்பிரமணியன் சோடாக் கம்பனி,**
வல்வெட்டித்துறை.


போலவே, அளவெட்டி என்றதும் அடுத்துப் பத்மநாதன் பெயர் நினைவில் வந்துவிடுகிறது. தமக்கென எடுத்த தொழிலில் மிக்க ஊக்கமும், கலாதேவியின் கருணையைப் பயபக்தியோடு வழிபடும் இயல்பும், இடைவிடாத அசுரசாதனையும் பொருந்திச் சுறுசுறுப்பும், நல்லொழுக்கமும், பெரியாரைப் பேணுதல் போன்றதுமான பண்புகளால் தம்மை வழிப்படுத்திக் கொண்டவரான இக்கலைஞர் பொதுவிஷயங்களிலும் தம்மை நன்கு ஈடுபடுத்துகின்றார். நாட்டில் நிகழக்கூடிய அனேகமான விழாவைபவங்களில் இவரது கச்சேரிகள் இடையீடில்லாமல் நிகழ்கின்றன. சில கோவில்களில் நித்தியமேளம் என்றபோர்வையில் அபசுரவித்துவான்களின் கச்சேரிகளால் கலாரசனையே அற்றுப்போகும் சந்தர்ப்பங்களில் மாட்டுப்பட்ட மக்களுக்குப் பத்மநாதனின் கச்சேரிகளில் மன அமைதியும் பேரின்பமும் கிடைக்கின்றது.

வழமையான பழம் இராகங்களோடு அபூர்வ இராகங்கள் பலவற்றிலும் நல்ல அனுபவமும் பெற்ற இவர் உருப்படிகளைக் கலகலப்பாகவும் ரம்மியமாகவும் கையாள்கின்றார். காம்போதி, பைரவி, காமவர்த்தனி, கல்யாணி போன்ற பல இராகங்களைக், கேட்பதற்கு அலுப்புத் தட்டாமல் மணிக் கணக்கில் விஸ்தாரமாக வாசிப்பதோடு நிரவல், சுரம், சில்லறை உருப்படிகள் இவற்றுலும் மக்களைக் கவர்ந்து விடுகின்றார். ஜதிபேதங்களைக் கவனமாகச் செய்து காட்டித் தமது தவில்காரர்களோடு நன்றாகப் பொருந்தி வாசிக்கும்போது

பேரின்பம் கிடைக்கின்றது. சுதியும் லயமும்இலட்சணசுத்தமாக அமைந்த நல்ல கலைஞர் இவர். இவரோடு கூட்டுச் சேர்ந்துள்ள தவில் வித்துவான்களாகிய திரு. குமரகுரு, ஸ்ரீமான் கணேசபிள்ளை ஆகியவர்கள் இவருக்கு மிக அனுசரணையாய் இருந்து கலையை வளர்க்கின்றார்கள். இப்போது தனித் தவில் வித்துவானாக இருக்கும் திரு. தட்சணாமூர்த்தி ஆரம்ப நாட்களில் பத்மநாதனோடிருந்து வாசித்து உயர்ந்தவரே. இவரைவிட்டுச் சென்றதன்பின்னர் காருக்குறிச்சி அருணாசலம்பிள்ளை அவர்களோடு சேர்ந்து தன் புகழை உயர்த்திக்கொண்ட தட்சணாமூர்த்தி இப்போதுங்கூட பத்மநாதனோடு சேர்ந்துகொண்டால் மேற்படி மூன்று தவில் வித்துவான்களும் பத்மநாதனும் சேர்ந்த கச்சேரிமூலம்நமக்குச் சிறந்த கலையின்பம் கிடைக்கும் ஆனால் இது சாத்தியப்படுமா?

எது எவ்வாறாயினும் வித்துவக் காய்ச்சலால் பீடிக்கப்படாத நமது பத்மநாதன் தமது உயர்ந்த இனிய பண்பாடுகளாலும் குருபாதசேவையாலும் தம்மை மென்மேலும் உயர்த்திக் கொள்வதோடு நமக்கும் இனிய இசையையனுபவிக்கும் வாய்ப்புக்களைத் தந்து மகிழ்விப்பார் என நம்புகிறோம். உயர்க அவர் கலைச்செல்வம்!

—மோகனம்.


# படிமுறை அட்சர கணிதம்

108 நாள்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும், விடைகளும் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் 1967 டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்.

**A. J. ஆசீர்வாதம்** B. Sc. ( Lond)

[ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்]

| | | |
|---|---|---|
| 6 | ஆம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் | 1-60 |
| 7 | ” ” ” ” | - 1-60 |

உங்கள் பிரதிகளுக்கு:-

**ஆசீர்வாதம்**

**அச்சகம் சக புத்தகசாலை**

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி:- 274)




மாம்பழ சீஸன் இப்போது ஆரம்பமாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் கொழும்பானுக்கு நல்ல மதிப்பு இருப்பதைப்போல, சிங்கள நாட்டில் ''யாப்புனேஅம்ப'' என்ற யாழ்ப்பாண மாம்பழத்துக்கு நல்ல மதிப்பு. ஆனால் இந்த இரண்டு இனப் பழங்கள் பற்றிய ஓர் உண்மை உங்களுக்குத் தெரியுமா? நாம் எதைக் 'கொழும்பான்' என அழைக்கிறோமோ அந்த இன மாமரம் கொழும்பில் மருந்துக்கும் கிடையாது. அதேபோல், அவர்களின் ''யாப்புனேஅம்ப''வும் யாழ்ப்பாணத்தில் கிடையவே கிடையாது!

பணம் வரும்போது பனித்துளி மாதிரிச் சேருகிறது; போகும்போதோ ஆற்று வெள்ளம் மாதிரிப் போய்விடுகிறது.

இலங்கையில் இப்போது சிறுகதைத் தொகுதிகள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன அல்லவா? எழுத்தாளர்கள் தம் சொந்தப் பணத்தில் அச்சிட்டு வெளியிட்டவையே இவையெல்லாம். ஆனால் பிரபல ஈழத்து எழுத்தாளர் சம்பந்தன் அவர்களின் சிறுகதைத் தொகுதி ஒன்றைத் தாமாகவே முன்வந்து வெளியிடுகின்றனர் சென்னையிலுள்ள ஒரு பிரபல வெளியீட்டாளர்கள். ஈழத்துக்குப் பெருமைதரக்கூடிய விஷயமல்லவா இது?

ஈழத்தின் முதலாவது சினிமா நடிகர் யார் தெரியுமா? அவர்தான் இலங்கை வானொலி நாடகப் பொறுப்பாளர் திரு. சண்முகநாதன் (சானா). பல ஆண்டுகட்கு முன்பு வெளியான ''தேவதாஸி'' என்ற படத்தில் ஒரு சிறிய பாத்திரத்தில் சானா தோன்றியுள்ளார்.

இந்தியாவிலே மலிவுப் பதிப்புக் காலம் என ஒன்று இருந்ததல்லவா? அரிய பெரிய நூல்கள் எல்லாம் குறைந்த விலைக்குப் பெறக்கூடியனவாக இருந்தன. அதே காலத்தில் இலங்கையிலும் ஒரு மலிவுப் பதிப்பு நூல் வெளிவந்தது. நூலின் பெயர் : திருக்குறளும் புத்துரையும். வெளியிட்டவர் : வரதர்.

இரண்டு ஹாலிவூட் நடிகைகள் பேசிக்கொண்டார்கள்:

''நான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்?''

''யாருடைய கணவர் அவர்?''

அமெரிக்காவிலே அளவுக்கு மீறிய வேகத்தில் காரை ஓட்டும் டிறைவர்களுக்கு விசித்திரமான தண்டனை அளிக்கப்படுகிறதாம்; அதாவது அவர்கள் ஓட்டும வண்டிகளுக்கு மணிக்கு 35 மைல் வேகத்திற்குமேல் ஓட முடியாதபடி செய்யும் ஒரு கருவியை இணைத்துவிடுகிறார்களாம்.

தன் பெருமையைப் பற்றிப் பெண்கள் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தாள் ஒரு 'டைப்பிஸ்ட்' பெண் ''மற்றவர்களைப்போல நான் ரகசியத்தைக் காற்றில் பறக்கவிடுபவளல்ல... நம்பமாட்டீர்களா? நேற்று எங்கள் மனேஜர் கையை எட்டிப் பிடித்தார். நானே கூச்சலிட முயன்றேன்! ஆனால் அவரோ காலில்விழுந்து இதை வெளியேசொல்லாதே என்றார். நான் இதுவரை அதை வெளியிடவேயில்லை.''




**சிந்திய துளிகள்:** கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் கண்ணன் தன் மாமன் மகள் ராதாவைக் காதலிக்கின்றான். ஆனால் இரண்டு குடும்பத்தினரும் உறவை மறந்து, பிரிந்து இருந்தபடியால் அவர்களின் காதல் வாழ்விற்கு இடையூறு ஏற்படுகின்றது. ராதாவின் தந்தை வேலாயுதம் பிள்ளை, சாதியிற் குறைந்த ஒரு பெண்ணை விவாகம் செய்துவிட்டார் என்ற காரணத்தால், கண்ணனின் தந்தை நடராசர் அவரை ஒதுக்கி வைத்திருந்தார். கண்ணன்–ராதா தொடர்பையறிந்த நடராசர் கொதித்தெழுகின்றார். ராதாவை மறந்துவிடும்படி மகனிடம் கண்டிப்பாகத் தெரிவிக்கின்றார். காதலின் அருமையை உணர்ந்த வேலாயுதம்பிள்ளை, தன் மகளின் உணர்ச்சிக்கு மதிப்புக்கொடுத்து, அவளுடைய விருப்பத்தை நிறைவேற்ற முயல்கிறார். கொழும்பில் கண்ணன் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரான கனகலிங்கத்தின் உதவியை நாடுகிறார் வேலாயுதம். தந்தையை எதிர்க்கவும் துணிவில்லாது, ராதாவை மறக்கவும் மனமில்லாது உணர்ச்சிச் சுழியுள் அகப்பட்டுத் தத்தளிக்கின்றான் கண்ணன். பிடிவாதமாயிருக்கும் தன் தந்தையின் மனதைச் சிறிது சிறிதாகத் தன் வசப்படுத்தி, அவரின் அனுமதியுடன் ராதாவைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற முடிவுடனிருந்த கண்ணனின் கைகளில் கடிதமொன்றைக் கொடுக்கின்றார் கனகலிங்கம்.

## துளி : ஐந்து

கடிதம் கையில் படபடக்க, கனத்த நெஞ்சும் துடிதுடிக்க, கால்கள் இரண்டும் வெட வெடக்க, கண்ணீர் மழையில் நனைந்தபடி கண்ணன் அறைக்குள் போய் மறைந்தான். இருள் நிறைந்த எதிர்காலத்தை எப்படியாவது ஒளியுமிழச் செய்யவேண்டும் என்று நினைத்து அவன் தீட்டி வைத்திருந்த தெளிவற்ற திட்டம் திடீரெனத் தரைமட்டமானதைப் போன்றிருந்தது அவனுக்கு. கண்ணீர்ப் பிரவாகத்தைக் கைகளினால் தடுத்துக்கொண்டு, மீண்டும் ஒரு தடவை கடிதத்தைப் படித்தான்.

வேலாயுதம்பிள்ளையால் கனகலிங்கத்தாருக்கு எழுதப்பட்டிருந்த கடிதம் அது.

"...என் மகளின் நல்வாழ்க்கை கருதி, என் மைத்துனரின் கால்களிற் கூட விழுந்து கெஞ்சிவிட்டேன். அவர் பழைய நடராசராகவே இருக்கிறார். இதுவரை நேரடியாகவும் மறைமுகமாகவும் அவர் எனக்குச் செய்த அநீதிகளையும் இன்னல்களையும் நான் மன்னித்து மறந்துவிட்டேன். ஆனால் நான் அவருக்கு இழைத்ததாக அவர் எண்ணிக்கொண்டிருக்கும் அவமானத்தை மறப்பதற்கு மட்டும் அவர் தயாராயில்லை...நான் நேரில் சென்று கல்யாண விஷயமாக அவருடன் பேசியபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் எழுதுவதற்கு இங்கு இடம் இல்லை, என் மனமும் அதற்கு இடம் தரவில்லை... ராதையின் நிலைமைதான் பரிதாபமாக உள்ளது. இத்தனை காலம் வரை செல்லமாக வளர்ந்துவிட்ட அவளால் இந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாதுபோலிருக்கின்றது. என்றாலும், அவள் என் மகள், காலப் போக்கில் அவளுடைய மனத்தைத் தேற்றி வேறொரு நல்ல இடத்தில் மணம் செய்து கொடுத்துவிடலாம் என நம்புகின்றேன். இவ் விஷயம் பற்றிக் கண்ணனிடம் இனி எதுவுமே பேச வேண்டாம்..."

"ஐயோ! ராதா!..."—வாய்விட்டலறினான் கண்ணன். மேலே தொடர்ந்து கடிதத்தைப் படிக்க அவனால் முடியவில்லை. ஈருடலாயினும் ஓருயிராகி, இலட்சியத் தம்பதிகள் என்று எல்லோரும் எந்நாளும் ஏற்றிப் போற்றும்படி இணை பிரியாது வாழவேண்டும் என்ற எண்ணத்தில் மண் விழுந்துவிடுமோ? ஒரு நொடியின்பின்னத்தில் அவன் அவளுக்கு அன்னியனாகி விடுவானோ? சிந்தனை அவனைச் சித்திரவதை செய்ய, கட்டிலின்மீது விழுந்து புரண்டு கதறினான்; குளறினான்.

தொடர்ந்து சிலநாட்கள் எப்படிக் கழிந்தன என்பது அவனுக்கே சரியாகத் தெரியாது. நடைப்பிணம் போன்று இருந்தான் அவன். வேலைக்குப் போகவில்லை; வேண்டியபொழுது சாப்பிடவில்லை; வேறு எவருடனாவது பேசவுமில்லை. கண்ணன் என்ற ஒருவன் அந்த வீட்டில் இருக்கின்றானா என்று எல்லாரும்சந்தேகப்படுமளவிற்குத்தன்னைத் தன்னுள் மறைத்து, தானாகத் தன்னை மறுத்துத், தன்னையே தன்னால் மறந்து வாழ்ந்தான் அவன். அவனுடைய உள்ளக் கொந்தளிப்புகளையும் உணர்ச்சிக் சிக்கல்களையும் உணர்ந்துகொண்ட கனகலிங்கத்தாரும் அவர் வாழ்க்கைத் துணை நலமும் அவனுடைய வழியிற் செல்லாது ஒதுங்கி இருந்தனர்.

ஓரளவிற்கு மனந்தேறி அலுவலகத்திற்கு அவன் செல்வதற்கு ஒரு வாரத்திற்கு மேல்ஆகிவிட்டது.

அலுவலக வேலைகளை முன்போல் ஒழுங்காகச் செய்வதற்குத் கண்ணனால் முடியவில்லை. சிந்தனையை எங்கோ செலுத்தியபடி வெறித்த பார்வையுடன் எந்நேரமும் இருந்தான். அவனுடைய போக்கில் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனித்த மேலதிகாரி அவனை அழைத்து அதுபற்றி விசாரித்

தார். சரியான பதிலளிக்காது சமாளித்தான் கண்ணன்.

மீண்டும் தன் இருக்கையில் சென்று உட்கார்ந்த அவன், இரண்டு மாதங்களுக்கு முன் நண்பனொருவன், கதையோடு கதையாக அந்த மேலதிகாரியைப் பற்றிக் கூறிய செய்திகளை நினைவு படுத்திக் கொண்டான்.

அந்த மேலதிகாரியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்தான். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. பல்கலைக் கழகத்தில் அவர் படித்துக் கொண்டிருந்தபோது சக மாணவி ஒருத்தியை காதலித்தார். ஆனால், பற்பல நொண்டிச் சாக்குகளை கூறி அவர்களின் திருமணத்தைத் தடுத்தார்கள் அவருடைய பெற்றோர் இருவரும். மகன் பிடிவாதமாக இருப்பதைக் கண்ட தந்தை அவரை வீட்டைவிட்டே விரட்டப் போவதாக மிரட்டினார் அவர் அதற்கும் மசியவில்லை. பெற்றோர், உற்றாரின் விருப்பத்திற்கு மாறாகத் தான் காதலித்தவளையே கல்யாணஞ் செய்துகொண்டார் பெற்றோருக்கும் பிள்ளைக்குமிடையே இருந்த உறவு அறுந்துவிட்டது. ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்காது பிரிந்து வாழ்ந்தனர். ஆனால் முதலாவது குழந்தை பிறந்ததும், பெற்றோர் தாமாகவே மகனிடம் சென்று சேர்ந்து உறவைப் புதுப்பித்தனர். பழைய பகைமையும் வெறுப்பும் இருந்த இடமே தெரியவில்லை. இப்போது இரண்டு குடும்பங்களும் ஒரு வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்கின்றன. பாசத்துடனும் நேசத்துடனும் பண்புடனும் அன்புடனும் வாழக் கொடுத்துவைத்த ஒரு சிலருள் அந்த மேலதிகாரியின் குடும்பத்தினர் குறிப்பிடக் கூடியவர்கள்.........

திடீரென்று தன் நிலையை அவருடைய வாழ்வுடன் சேர்த்து ஒப்பு நோக்கினான் கண்ணன்.

என் மேலதிகாரியைப் போல் துணிந்து நான் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? சிறிது காலம் பெற்றோரைப் பிரிந்து வாழ நேரிடலாம். ஆனால் காலம் செல்லச் செல்ல எல்லாமே சரியாகிவிடும். அவர்களை எப்படியாவது என் வழிக்குக் கொண்டுவரலாம்!

காரிருளில் தோன்றிய மின்னல் அவனுக்கு வழி காட்டியது.

அன்று முழுவதும் இந்த வழியிலேயே அவனுடைய சிந்தனை சென்றது. சிந்திக்கச் சிந்திக்க தான் செய்த முடிவு சரியென்ற உறுதி அவனுக்கு ஏற்பட்டது.

உள்ளம் எழுச்சி பெற்றது. உடற்சோர்வு ஓடி மறைந்தது. எஞ்சியிருந்த அன்றைய வேலைகளைச் சற்றுச் சுறுசுறுப்புடன் செய்து முடித்துவிட்டு வீட்டுக்கு ஓடினான். அறைக் கதவைத் தாழிட்டபின், தன் மன நிலையை விளக்கி, தான எடுத்துக்கொண்ட முடிவையும் குறிப்பிட்டுத் தந்தைக்கு நீண்டதோர் கடிதம் வரைந்தான்.

அன்புள்ள அப்பாவுக்கு,

கடவுள் கிருபையால் நான் நல்ல சுகத்துடன் இருக்கின்றேன், அதேபோல் உங்கள் சுகத்தையும் அம்மாவின் சுகத்தையும் அறிய விரும்புகின்றேன். இங்கே திரு. கனகலிங்கமும் குடும்பத்தினரும் சுகமே இருக்கின்றனர்.

நிற்க. இப்படியான ஒரு கடிதம்

என்னிடமிருந்து வரும் என நீங்கள் ஒருபோதுமே எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள். நான் இப்போதிருக்கும் நிலைமையில் இப்படித்தான் எழுதவேண்டியுள்ளது. எழுதுகிறேன்; பொறுமையுடன் எல்லா விஷயங்களையும் ஆலோசித்துப் பார்ப்பீர்களென நினைக்கின்றேன்.

என்னுடைய கல்யாண விஷயமாக நான் ஒரு முடிவிற்கு வந்துள்ளேன். வேலாயுத மாமா அவர்களின் மகள் ராதாவையே கல்யாணம் செய்யவேண்டுமென்பது என் நெடு நாளைய ஆசை; இலட்சியம். அவளுக்கும் வாக்குறுதி கொடுத்துவிட்டேன். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது தான் தர்மம்.

வேலாயுத மாமாவை நீங்கள் வெறுப்பதன் காரணம் சரியானதாக எனக்குத் தெரியவில்லை. வரட்டுக் கௌரவத்தைப் பெரிதாகக் கருதி, நல்லதொரு குடும்பத்தை எதிரியாகப் பாவித்து வருகிறீர்கள். தன்னிலும் பார்க்கச் சாதியில் குறைந்த பெண்ணை அவர் மணம் செய்தது மகா பாபமா? மன்னிக்கமுடியாத குற்றமா? மகா பெரிய பாபம் என்றால், அதற்குரிய தண்டனையை அனுபவிக்காது அந்தக் குடும்பம் சீரோடும் சிறப்போடும் வாழ முடியுமா? அவர் செய்தது குற்றம் தானென்றால் அதற்கு நீங்கள்தான் தண்டனை கொடுக்க வேண்டுமென்று யார் உங்களிடம்சொன்னார்கள்?

அப்பா, உலகம் முன்னேறி வருகின்றது. இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் முன்னொரு காலத்தில் அவசியமானவையாக இருந்திருக்கலாம். ஆனால் இந்த யுகத்தில் அவை அர்த்தமற்றவையாகவே தோன்றுகின்றன. கருத்தில்லாத சக்கையை நாம் ஏன் கட்டிக்கொண்டு அழவேண்டும்? அறிஞர்களும் பெரியார்களும், ஏன் சமயவாதிகளும்கூட, சமத்துவத்தையே இப்போது வற்புறுத்திவருகின்றார்கள். நீங்கள் மட்டும் எதிர்நீச்சுப் போட விரும்புகின்றீர்கள். அதனால் என்ன நன்மையை அடையப் போகின்றீர்களோ எனக்குத் தெரியாது.

ராதாவை நான் கல்யாணம் செய்தால், எங்கள் .குடும்பத்தின் மானமே கப்பலேறிவிடும் எனப் பயப்படுகின்றீர்கள். அது வீண் கற்பனை; பிரமை. சாதியைக் கொண்டு மனிதனை மதிப்பிடும் காலம் இதுவல்ல. அறிவுக்கும், தூய்மையான அன்புக்கும் பண்புக்




ஆசிரியர்:- டேய் மணி! ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

மணி:- ஓ வளையுமே. ஐந்து வயதில் நேராக இருக்கிற முதுகு ஐம்பது வயதில் வளைந்து விடுகிறதே.

கும் மதிப்புக் கொடுக்கும் காலத்திலே தான் நாம் வாழ்கின்றோம். அப்படிப் பார்க்கும்போது, ராதாவை நான் கல்யாணம் செய்வதால் எங்கள் குடும்பத்தின் மதிப்பும் கௌரவமும் உயருமே தவிர இம்மியளவேனும் குறையாது.

உங்களை அவமதிப்பதாகக் கருத வேண்டாம். பெற்ற மகனே இப்படிக் கண்டபடி உளறுகிறானே என்று கொதிப்படைய வேண்டாம். உங்கள் இருவர் மீதும் நான் வைத்திருக்கும் அன்பும் மரியாதையும் அன்றுபோல் இன்றும் அப்படியே இருக்கின்றன; இனி என்றும் அப்படியே இருக்கும். இதே போன்ற அன்பைத்தான் நான் மாமாவின் குடும்பத்தினரிடமும் செலுத்துகின்றேன். அதற்காகத்தான் ராதாவைக் கல்யாணம் செய்து கொள்வதற்கும் தீர்மானித்திருக்கிறேன். பிரிந்து வாழும் இரண்டு குடும்பங்களையும் பிணைத்து வைக்கும் பாலமாக இருக்க விரும்புகின்றேன்.

எங்கள் கல்யாணம் நடைபெறாவிட்டால், ராதாவின் நிலை என்ன...? எக்கச்சக்கமாக ஏதாவது நடந்துவிட்டால்...? கொலைகாரன் என்ற பட்டம் எனக்குச் சூட்டப்படும். ஒரு கொலைகாரனின் தந்தை என்ற இழுக்கு உங்களுக்கு ஏற்படும். அப்படி ஏற்பட்டால், எங்கே சென்று எந்த வழியில் அந்த அவப்பெயரைத் துடைத்து எறிவது?

இவைகள் எல்லாவற்றையும் நன்றாக ஆலோசித்துப் பார்த்து, நீங்களாகவே மாமாவீட்டிற்குச் சென்று பெண்கேட்பீர்கள் என நினைக்கின்றேன். இத்தனை காலமும் அவர்களை ஒதுக்கி வைத்த கொடுமைக்குப் பிராயச்சித்தம் தேடுவதற்காகவாவது நீங்கள் செல்லத்தான் வேண்டும்.

பழைய பிடிவாதத்துடன் இன்னமும் இருப்பீர்களானால், உங்களின் விருப்பத்திற்கெதிராக நானே அங்கு செல்ல நேரிடும். அப்போது என்னை நீங்கள் வெறுத்து ஒதுக்கினாலும் என்றாே ஒருநாள் என்னையும் ராதாவையும் விரும்பி வரவேற்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

உங்களுடைய கடிதம் நல்ல செய்திகளைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கின்றேன்.

உங்களன்புள்ள
கண்ணன்

தந்தை முன்னே நின்றால், பேச்சற்று மூச்சற்றுப் பேடியாய்ப் பதுங்குபவன், தனியறையில் இருந்து கொண்டு தன்மனம்போனபடி எழுதினான். கடிதத்தை எழுதி முடித்ததும் ராதாவையே கல்யாணம் செய்துவிட்டதைப் போன்ற நினைவில் மூழ்கினான். உடம்பெங்கும் புல்லரித்தது. ராதா காதிற்குள் வந்து இரகசியம் பேசுவது போலவும், மடியில் கிடந்து செல்லம் சிந்துவது போலவும், சிரிப்பது போலவும் சிணுங்குவது போலவும் பிரமை தட்டியது.

அவன் வெறியனானான். துயர மிகுதியால் இதுவரை சரியாகத் தூங்காதவன், அளவிற்கு மீறிய

ஆனந்த வெறியால் இன்று தூங் காமலே இரவைக் கழித்தான்.

⁂ ⁂ ⁂

விடிந்தது. வழக்கம்போல் அன் றைய புதினத்தாள்களைப் புரட்டி ஞன். ஓர் ஆங்கிலத் தினசரியில் பெரிய எழுத்துகளில் போடப்பட் டிருந்த செய்தியொன்று அவன் கண்களில் புகுந்து இதயத்தைக் குலுக்கியது. கல்யாணம் சம்பந்த மாக ஏற்பட்ட ஒரு தகராறு காரண மாக ஒரு தந்தை தன்மகனைச் சுட் டுக் கொன்றுவிட்டுத் தானும் தற் கொலை செய்து கொண்டாளும்! துப்பாக்கிச் சூட்டுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்து துடித்த இரு வரின் படங்களும் அந்தச் செய்தி யுடன் வெளியாகியிருந்தன.

கண்ணனுடன்சேர்ந்து, அவன் கையிலிருந்த புதினத்தாளும், உட் கார்ந்திருந்த நாற்காலியும் நடுங்கத் தொடங்கின.

'இப்படி ஏதாவது எங்கள் குடும்பத்திலும் ஏற்பட்டால்...? நினைக்கும்போதே நெஞ்சைவதைக் கும் இந்த நிகழ்ச்சி, நிசமாகவே நடந்துவிட்டால்...? ராதாவுக்கு வாழ்வில்லை. எங்கள் குடும்பமும் வழியிழந்து, வகையிழந்து, வலு விழந்து நிற்கும்...! கடவுளே!'

பலவீனமடைந்த கண்ணனின் இதயம் பரிதாபமாக ஓலமிட்டது. முதனாள் அவனிடமிருந்து பிரியா விடை பெற்றுச் சென்ற பயமும், சந்தேகமும், கோழைத்தனமும், வீண்கற்பனையும் மீண்டும் அவனை வந்தடைந்து ஆட்டிப் படைக்கத் தொடங்கின.

தந்தைக்கு எழுதிய கடிதத் தைத் தொடுவதற்கேகைமறுத்தது. அதை அனுப்புவதா? வேண்டாமா? என்ற தர்க்கம் எழுவதற்கு முன் பேயே, 'இப்போதைக்கு அனுப்ப வேண்டாம், என்ற தீர்மானத் திற்கு வந்திருந்தான் கண்ணன்.

நேரம் செல்லச் செல்ல, புதி னத்தாள் எழுப்பிய பயங்கர நினை வுகளுடன் புதிய பயம் ஒன்றுஈ சேர்ந்து கொண்டது.

'வேலாயுதம் இப்போது சும்மா இருப்பாரா? ராதாவின் கல்யாணத் திற்கு வேறு ஏதாவது ஒழுங்கு களைச் செய்துவிடுவாரோ?'

ராதாவை எண்ணியபோது, பரி தாபகரமாய்த் தன்னைப் பரர்த்துக் கெஞ்சும்அவளின் அழகு முகம்தான் கண்ணனுடைய மனத்திரைகளில் தோன்றியது. அவளுடைய உறுதி யில் அவனுக்கு அபார நம்பிக்கை இருந்தது. "உங்களை நான் என்று மே மறக்கமாட்டேன்" என்று அவள் அடிக்கடி கூறியது இன்றும் அவன் காதுகளில் ஒலித்தது "வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமை யாகும் உங்களால், உருப்படியாக எதையுமே சாதிக்க முடியாது" என்று ராதா ஒருதடவை குத்திக் காட்டிக் குற்றம் சாட்டியதையும் "ஏதாவது காரணத்தினல் நாம் இருவரும் சேர்ந்து வாழ முடியா விட்டால்..." என்று முன்பொரு தடவை அரைகுறையாக அவள் எழுதியதையும் அவன் பொருத்திப் பார்த்தான். நெஞ்சு'திக்' கென்றது.

இதே ரீதியில் தொடர்ந்து தன் சிந்தனையைச் செலுத்த விரும்பாது தன் ஆசை முழுவதையும் கொட்டி

ராதாவுக்கு ஓர் அவசரக் கடிதம் எழுதினன். யார் என்ன சொன்னலும் அதைக் காதில் விழுத்தாது தனக்காகக் காத்திருக்கும்படியும், தன் தந்தையின் மனத்தை மாற்றி விரைவில் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாகவும் உறுதியளித்து எழுதினன், கடிதத்தை இரகசியமாக அனுப்பவேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை. ராதாவின் வீட்டிலுள்ள அனைவர்க்கும் அவளின் கதை தெரியுமாதலால், அவளுடைய வீட்டு முகவரிக்கே கடிதத்தை அனுப்பினன்.

நாட்கள் நகர்ந்தன. தந்தைக்கு எழுதிய கடிதத்தை அனுப்பும் துணிவு இன்னமும் அவனுக்கு வரவில்லை. ஆசைக்கும் பாசத்துக்குமிடையே கிடந்து ஊசலாடியது அவன் உள்ளம். குமுறிக் கொதிக்கும் தன் தந்தையின் நினைவை அகற்றிவிட்டு, எழில் கொஞ்சும் தன் இனிய ராதையைப் பற்றிய இன்ப நினைவில் காலத்தை உருட்டினன்.

∴ ∴ ∴

ஒரு நாள். இனந்தெரியாத பயவுணர்ச்சி மனத்தைப் பீடிக்க, வழக்கத்திலும் பார்க்கச் சற்று முன்னதாகவே அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்தான் கண்ணன். இரண்டு கடிதங்கள் அவனுக்காகக் காத்திருந்தன.

ஆவலுடன் அவற்றை எடுத்தான். முதலாவது கடிதத்தை அவனுடைய தந்தை நடராசர் எழுதியிருந்தார். வேலாயுதம்பிள்ளை வீட்டிற்கு வந்ததைப் பற்றிக் கேலியாகக் குறிப்பிட்டு, தான் அவரை ஏசியதையும் பேசியதையும் உதைத்து அனுப்பியதையும் பற்றி அளந்துவிட்டு, கண்ணனுக்கு வேறொரு இடத்தில் பெண்பார்த்திருக்கும் செய்தியை எழுதியிருந்தார். பெரிய இடத்துப் பெண்ணும், ஐம்பதிணயிரம் வரை சீதனமாம், அழகில் ரதியாம். தான் சம்மதம் கொடுத்து விட்டாராம்!

வெறுப்புடன் வீசியெறிந்தான் கடிதத்தை. 'அவர் சம்மதம் கொடுத்து விட்டால், அவரே அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதுதானே! எனக்கேன் இங்கு எழுத வேண்டும்?'

இதே வெறுப்புணர்ச்சிபுடன், இரண்டாவது கடிதத்தை எடுத்துப் பிரித்தான். பழக்கப்படாத கையெழுத்தில் முகவரி எழுதப்பட்டிருந்தது,

உள்ளே திருமண அழைப்பிதழ் ஒன்று கிடந்தது. பரபரப்புடன் அதைப் படித்தான்.

'...திருநிறைச் செல்வன் தியாகராசனுக்கும் நிறைமதிச் செல்வி ராதாவுக்கும் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்..."

அவ்வளவுதான், உலகமே ஒன்று திரண்டு, இருண்டு உருண்டு அவனைப் பயமுறுத்தியது; படுகுழியில் தள்ளிவிட்டு வேடிக்கை பார்த்தது.

குமுறுவதற்கென்றே அமைந்த நெஞ்சு குமுறியது; குளறுவதற்கென்றே இருந்த வாய், குளறியது. குடம் குடமாக நீரைப் பெருக்குவதற்கென்றே அமைந்த கண்கள், நீரைப் பெருக்கின

—தொடரும்




கி. இராமலிங்கம், சுதுமலை.

கே: என் இதயத்திலிருப்பவளை என் இல்லத்தரசியாக்குவதற்கு ஒரே வழி...?

ப: கல்யாணம் செய்வதுதான்!

நா. சுந்தரம், புத்தூர்.

கே: வாழ்க்கையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நகைச்சுவை நிறைந்த நல்ல படம் என நினைக்கின்றேன். புதுமுகம் வைஜந்திமாலாவிற்குப் பெரும் புகழ்கொடுத்த படம் என நினைக்கின்றேன்!

சி. தேவராசன், வண்ணார்பண்ணை.

கே: தங்களுக்கும் தங்கள் மனைவிக்குமிடையே அபிப்பிராய பேதம் ஏற்படுவதில்லையா? அதனால் சண்டை ஏற்படுவதில்லையா?

ப: இல்லை. அபிப்பிராய பேதம் ஏற்படுவதென்னவோ உண்மைதான். ஆனால் நான் அதை வெளியில் சொன்னாலல்லவா சண்டை ஏற்படும்?

த. கிருபைராசா, மட்டக்களப்பு.

கே: "மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார்" என்ற பெயருடைய ஒரு புலவர் இலங்கையில் இருந்தாராமே! அவரைப் பற்றிச் சிறிது சொல்வீர்களா?

ப: 'உலகியல் விளக்கம்' போன்ற சிறந்த நூல்களை ஆக்கிய நவநீத கிருஷ்ண பாரதியார்தான் அந்தப் புலவர். மணிவாசகரின் திருவாசகத்திற்கு ஓர் ஆராய்ச்சிப் பேருரை எழுதி அழியாப் புகழ் பெற்றவர் அவர். மாவை என்பது அவரூராகிய மாவிட்டபுரத்தையும், கவுணியன் என்பது கவுணிய கோத்திரத்தையும் குறித்து நிற்கும். நவநீத கிருஷ்ணன் என்பதன் தனித்தமிழாக்கமே 'வெண்ணெய்க் கண்ணன்'!

இரா. பழனியாண்டி, கண்டி.

கே: கன்னடத்துப் பைங்கிளியை நான் கல்யாணம் செய்து இலங்கைக்கு அழைத்து வருவேன். இருவருமாகச் சேர்ந்து கலைப்பணிபுரிவோம். அவரைக் கதாநாயகியாக வைத்து இங்கிருந்தே தரமான படங்களைத் தயாரிப்பேன்...?

ப: தங்களுடைய அடுத்த கடிதம் அங்கொடையிலிருந்து வருமென எதிர்பார்க்கின்றேன்!

வி. க. கந்தசாமி, பொரளை.

கே: பிரபல எழுத்தாளர் அ. செ. மு. அவர்களின் சிறுகதைத்தொகுதி ஏன் இன்னும் வெளியாகவில்லை?

ப: அ. செ. மு. அவர்களின் சிறுகதைத் தொகுதி ஒன்றைத் தன்

சொந்தச் செலவில் வெளியிட்டு, அதனுல் வரும் வருவாய் முழுவதையும் அவருக்கே கொடுத்து உதவி செய்வதற்கு முன்வந்தது இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம். ஆனல் என்ன காரணத்தாலோ, அ.செ.மு. அவர்கள், தான் எழுதிய சிறுகதைகளைக் கொடுப்பதற்குத் தயங்கினுர். ஆகவே இ. த. எ. சங்கம் தன் முயற்சியைக் கைவிட்டுவிட்டது!

"மயிலழகன்", நெல்லியடி.

கே: சட்டத்தினுல் சாதியை ஒழிக்கலாமா?

ப: முடியாது என்பது என் திடமான கருத்து. மனமாற்றம்தான் இத்தகைய தீமைகளை ஒழிக்குமே தவிர, மற்ற எந்தப் பலாத்கார நடவடிக்கையுமே சரி வராது. சாதியின் பெயரால் இயங்கிவரும் சங்கங்கள் முதலில் ஒழிக்கப்படவேண்டும்!

சி. பத்மராணி, வெள்ளவத்தை.

கே: சிவாஜியின் நடிப்புச் சரியில்லை; ஸ்ரீதரின் டைரக்ஷன் சரியில்லை என்று ஜெயகாந்தன் சொன்ஞரல்லவா? இப்போது அவருடைய படத்தில் நடிப்பவர் யார்? டைரக்டர் யார்?

ப: ஜெயகாந்தனின் இப் பொறுப்பற்ற பேச்சு, பல தொல்லைகளை ஏற்படுத்திவிட்டது. தயாரிப்பாளர் வேலுமணி, ஜெயகாந்தன் எழுதிய "யாருக்காக அழுதான்" என்ற கதையைப்படமாக்குவதைக் கைவிட்டு விட்டார்!

கா. இரத்தினசிங்கம், கொக்குவில்.

கே: எழுத்தாளர் மத்தியில் நான் பிரபலமடையவேண்டும், ஒரு வழி கூறுங்கள்?

ப: எழுத்துத்துறையில் இறங்கி உங்கள் திறமையைக் 'காட்டுங்கள். அல்லது, யாராவது ஒரு பிரபல எழுத்தாளரைக் கிண்டல் பண்ணிப் பகிரங்கக் கடிதம் எழுதுங்கள்!

தி. சௌபாக்கியவதி, மாத்தளை.

கே: தோல் தோழன், கால்காவலன் போன்ற மருந்துகளைத் தயாரிப்பதைத் தமிழ்வாணன் நிறுத்தி விட்டதன் காரணம் என்ன?

ப: போலி மருந்து தயாரிப்பது சட்டப்படி கடுங்குற்றம் என்பதை யாரோ சுட்டிக்காட்டிவிட்டார்கள் போலும்!

ம. கலாராணி, கொட்டாஞ்சேனை.

கே: உலகில் மிகவும் உயரமான இடம் இந்தியாவில்தானே இருக்கின்றது?

ப: ஆமாம்! உயர்ந்த உள்ளமுடைய பலர் இந்தியாவில்த்தான் இருக்கின்ருர்கள். உயர்ந்தவர்களின் உள்ளம்தான் உலகிலேயே மிகவும் உயரமான இடம்!

சி. கார்த்திகேசு, அனுராதபுரம்.

கே: சென்ற ஆண்டைப்போல் இவ்வாண்டிலும் "கலைச்செல்வி" கலைவிழா நடைபெறுமா? எங்கே?

ப: நடைபெறும் என்றுதான் நம்புகின்றேன், ஆனல் எங்கே என்பது இன்னும் சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை. கொழும்பில் நடாத்தும்படி கொழும்புத் தமிழன்பர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள். மட்டக்களப்பிற்கு வரும்படி, மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த சில முக்கிய உறுப்பினர்கள் அழைத்துள்ளார்கள். கலைச்செல்வி நிர்வாகக் குழு என்ன முடிவு எடுக்கின்றதோ யாரறிவார்?

அ. கண்ணப்பன், மருதானை.

கே: நடிகை புஷ்பலதாவின் கணவனின் பெயரென்ன?

ப: புஷ்பலதாவிற்கு இன்னும் திருமணம் நடைபெறவில்லை. 'நானும் ஒரு பெண்" என்ற படத்தில் நடிக்கும் புதுமுகம் ராஜனுக்கும் புஷ்பலதாவிற்குமிடையே நிஜமாகவே காதல் அரும்பிவிட்டதாம். இருவருக்கும் விரைவில் திருமணம் நடைபெறுமெனத்தெரிகிறது!

க. இராமநாதன், அச்சுவேலி.

கே: சொந்த மொழியில் விஞ்ஞானம் கற்பிப்பதைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

ப: ஒருவனின் சிந்தனையை வளர்ப்பதும் வளம்படுத்துவதும் அவனுடைய சொந்த மொழிதான் என்பதை உலகத்து அறிஞர்கள் பலர் ஒப்புக்கொண்டுள்ளார்கள். விஞ்ஞானம் மட்டுமல்ல எல்லாமே சொந்த மொழியிற்றான் கற்பிக்கப்படவேண்டும். இலங்கையில் போதிய விஞ்ஞான நூல்கள் தமிழ், சிங்கள மொழிகளில் இல்லை என்று சொல்வது போலிக்காரணமாகும். இரு மொழிப்புலமைபெற்ற அறிஞர்களின் சேவையைச் சம்பந்தப்பட்டோர் நன்கு பயன்படுத்தவில்லை. இஸ்ரவேல் நாட்டில், ஆண்டொன்றிற்கு இரண்டாயிரம் நூல்கள் ஹீபுறு மொழியில் பெயர்க்கப்படுகின்றனவாம். ஆனால் இலங்கையில்......?

---


**தாண்டவக்கோன்**

மே/பா கலைச்செல்வி

பாலன் வெளியீடு

செட்டிகுளம்.


---

## திருக்குறள் கீர்த்தனை - 9

கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை

இராகம்: ஸிந்துபைரவி — தாளம்: ஆதி

**பல்லவி.**

கொள்கையில்லாதார் கொள்ளும் ஐம்பொறிகளால்
கொண்டிடும் குணமேது? — உலகினிலே

**அனுபல்லவி**

உள்ளமாகிய தூய வெள்ளை இடத்தில் அன்பு
வெள்ளமாக ஈசனைக் கொள்ளவேண்டும் என்ற.

**சரணம்**

கோள் இல்லாப் பொறிகளால் குணப்பலன் இல்லை
[எட்டுக்
குணங்களைக் கொண்டிருக்கும் குவலய நாதனவன்
தாள்களை வணங்காத தலைகளால் பயன் இல்லை
நாள்களை வீணுக்கி நானிலத்திலே தெய்வக்

— யாழ்ப்பாணம் ந. வீரமணி

# பக்த மீரா

## திவ்ய ஜீவன சங்கம்

திவ்ய ஜீவன சங்க யாழ்ப்பாணக் கிளையினர் பக்த மீரா என்ற நாடகத்தைச் சென்ற 21.5.63 செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் அரங்கேற்றினர்கள். பக்த மீராவின் கதை பலரறிந்த ஒன்று. அரச குடும்பத்தில் பிறந்து, சகல சுக போகங்களையும் துறந்து, நாம சங்கீர்த்தனத்தில் சிறந்து, பக்தி மார்க்கத்தில் உயர்ந்து விளங்கியவள் மீரா. மக்களுக்கு நன்கு அறிமுகமான இக் கதையை மேடைக்கேற்றபடி காட்சிகளாகப் பிரித்துப் பொருத்தமான வசனங்களை எழுதியவர் புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி. இரண்டொரு இடங்களில் வசனம் காவியச் சுவையுடன் மிளிர்கின்றது. பழம் பெரும் நடிகரான கலையரசு சொர்ணலிங்கம் உதயப்பூர்மன்னனாகத்தோன்றிக் கச்சிதமாகப்பேசினர். பெரும்பாலும் பெண்களே நடித்த இந் நாடகத்தில் உதயப்பூர் மகாராணியாக ஒரு ஆணையே நடிக்கவைத்தது, நாடகத்தில் நகைச்சுவை இல்லாத குறையை ஈடுகட்டவோ என்னவோ! இந் நாடகத்தில் எல்லாரது ஒருமித்த பாராட்டையும் பெற்றவர் மீராவாக நடித்த செல்வி. யோகா இராசையா B. A. அவருடைய தோற்றத்தில் அருட்பொலிவு இருந்தது; முகத்தில் சாந்தம் தவழ்ந்தது; பேசியபோதும் பாடியபோதும் பக்திச்சுவை நனி சொட்டியது. தென்னிந்தியாவின் தலைசிறந்த மேடை நடிகைகளுடன் வைத்தெண்ணக்கூடிய தகுதியும் திறமையுமுடையவர் இவர். ஒரு காட்சியில் மட்டும் தோன்றிய கனகரத்தினம் (அக்பர் பாதுஷா) நினைவில் நிற்கிருர். தோழிகளின் நடிப்பும் பரவாயில்லை. நாடகம் முழுவதுமே டைரக்டர் தேவனின் முத்திரை பதியவில்லையாயினும், இரண்டொரு இடங்களில் அவரின் திறமையைக் காண்கின்ருேம். அவர் அமைத்த கனவுக் காட்சி குறிப்பிடக்கூடியது. இன்னும் முயன்றிருந்தால், அதிகக் கவர்ச்சியை ஊட்டியிருக்கலாம். மீராவின் குரல் கேட்டுக் கண்ணனின் கோவில் கதவு தானுகத் திறபடும் காட்சி பிரமாதமாக இருந்தது. நாடகத்திற்கேற்ற நல்லதோர் முடிவுக்காட்சி அது. நடனத்திற்குப் பொறுப்பாயிருந்த A.V.R. இராஜரத்தினம் பிள்ளையும், இசையமைத்த பலாம்பிகை நடராஜாவும் சிறப்பான முறையில் தங்கள் பங்கை நிறைவேற்றியுள்ளனர். புனிதமான நினைவுகளை இரசிகர்களின் மனதில் எழுப்பும் வகையில் இப் பக்தி நாடகத்தை அரங்கேற்றுவதற்குப் பொறுப்பாயிருந்த அனைவரையும் பாராட்டுகின்ருேம்.

—சிற்பி.

# திரைவிருந்து!

## ஜெமினியின் ஆங்கிலப் படம்

இந்தியத் திரையுலகில் 'பிரம்மாண்டமான' தயாரிப்புகளுக்குப் பெயர் பெற்ற ஜெமினி அதிபர் வாசன், ஆங்கிலத்தில் முழு நீள வர்ணப்பட மொன்றைத் தயாரிப்பதுபற்றி ஆலோசித்து வருகிருர். அமரிக்க மந்திரவாதியான ஜான் கால்வர்ட் இப்படத்தில் முக்கிய பாத்திரமேற்பர் இந்திய நடிகர்கள் பலரும் இதில் நடிப்பார்கள். அமெரிக்க இந்தியக் கூட்டுத் தயாரிப்பாக இது இருக்குமாம்.

## காதலித்தால் போதுமா?

பிரபல பத்திரிகைகளில் தொடர் நாவலாக வெளிவந்து பல இலட்சம்

கலாசித்ராவின் "ஆயிரம் ரூபாய்" படத்தில் ஜெமினிகணேசனும் ராகினியும் இப்படிக் காட்சியளிக்கின்றார்கள்.





"இதயத்தில் நீ" என்ற படத்தில் லட்சுமிராஜ்யம்—தேவிகா.

வாசகர்களின் நெஞ்சைக் கவர்ந்த கதைகள், படமாகத் தயாரிக்கப்படும் போது எதிர்பார்த்த வெற்றியைக் கொடுப்பதில்லை. "கல்கி'யின் பார்த்திபன் கனவு", அகிலனின் "பாவை விளக்கு" ஆகியவை வெற்றிப்படங்களல்ல. சமீபத்தில் வெளியான அகிலனின் 'குலமகள்ராதை'யும்மிகச்சிறந்த படம்எனக் கூறமுடியாது. இந்தநிலையில், "காதலித்தால் போதுமா?" என்ற கதையைப் படமாக்கத் திட்டமிட்டிருக்கின்றனர் வாசு பிலிம்ஸார். இக்கதை ஏற்கனவே "ஆனந்த விகடனி"ல் தொடராக வந்ததை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். கதையை எழுதியவர் மணியன். படத்தை ஸ்ரீதர் டைரக்ட் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே படம் வெற்றிப் படமாக அமையும் என எதிர்பார்ப்பதில் தவறில்லையா?

## வெளி நாட்டு விழாவில்

இவ்வாண்டு ஆடி மாதத்தில் இந்தியத் தொழில் கண்காட்சி ஒன்று மாஸ்கோவில் நடைபெற இருக்கிறது. அந்தக் கண்காட்சியின்போது திரையிடப்படுவதற்காகப் பத்துத் தென்னிந்தியப்படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் ஐந்து தமிழ்ப்படங்கள், நான்கு தெலுங்குப்படங்கள், ஒனறு கன்னடப் படம். நெஞ்சில் ஓர் ஆலயம், சாரதா அன்னை, கொஞ்சும் சலங்கை, ஆலய மணி—ஆகியவையே அங்கு திரையிடப் படவிருக்கும் தமிழ்ப்படங்கள்!



அன்பு பிலிம்சாரின் ''ஆசை அலைகள்'' என்ற படத்தில் பாலாஜியும் இலட்சிய நடிகரும் அத்தியந்த நண்பர்களாக நடிக்கின்றார்கள்.

## நெஞ்சில் ஓர் ஆலயம்

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு அனுப்புவதற்கென ஸ்ரீதரின் நெஞ்சில் ஓர் ஆலயத்தை மத்திய சர்க்கார் தெரிவு செய்துள்ளது. விழா ஆடிமாதம் 17ந் திகதி தொடக்கம் 28ந் திகதி வரை லொகார்னோ என்ற இடத்தில் நடைபெறும்.

## இதயத்தில் நீ!

''பனித்திரை'' படத்தைத் தயாரித்தளித்த முக்தா பிலிம்ஸார் தமது ''இதயத்தில் நீ'' என்ற புதிய படத்தைத் தயாரித்து முடித்துள்ளனர். ஜெமினி கணேசன், தேவிகா, லட்சுமிராஜ்யம், ராதா, தங்கவேலு ஆகியோர் முக்கிய பாத்திரமேற்றுள்ளனர். விசுவநாதன்-ராமமூர்த்தி இப்படத்திற்கு இசையமைத்துள்ளனர்.






## நவீன முறையில் படப்பிடிப்பு

பெருப்பித்தல்,

வர்ணந்தீட்டுதல்,

புளக் செய்தல்.

**மற்றும் படப்பிடிப்பு (Photography)**

சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்குத்
திருப்தியளிக்கக் கூடிய ஸ்தாபனம்.

சொந்தக்காரர்:- J. A. பேரின்பநாயகம்.




ஆடும்போதும் பாடும் போதும்
அழகு நகைகள் ஜொலிக்கட்டும்

மங்கையர் மகிழ, மாசறு பொன்னில்

எங்கள் கடையில் நகைகள் செய்வோம்

இன்றே வாங்குங்கள்

# கே. என். எம். மீருன் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.
போன் 585 தந்தி: மன்சூரு



செட்டிகுளம் பாலன் வெளியீட்டு நிலையத்தினரால் சுன்னாகம் கலாதேவி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.